

மெல்லினம்

# இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்

றவூப் ஸெய்ன்

**இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்**

இஸ்லாமிய மயமாக்கல், இஸ்லாமிய நோக்கில் சர்வதேச உறவுகள், பிரச்சினைகள் பற்றிய ஆய்வில் ஈடுபாட்டுடன் பேசி வருபவர் றவூப் ஸெய்ன்(28). இலங்கையிலுள்ள இறக்காமம் எனும் ஊரில் பிறந்த இவர் தற்போது கொழும்பில் வசித்து வருகிறார். தத்துவம், இஸ்லாமிய அரசியல் குறித்து இவர் எழுதிய பல ஆய்வுக் கட்டுரைகள் முக்கியமானவை. தற்போது இலங்கையிலிருந்து வெளிவரும் மீள்பார்வை மாதஇதழின் ஆசிரியராகவும், முஸ்லிம் தகவல் மையத்தின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் பணியாற்றி வருகிறார்.

The Reader
BOOKSHOP
No: 15, Smith Lane, Meeraniya Street, Colombo-12.
Tel: 0773467487 Email: thereaderbooks@gmail.com

DARUL IMAN TRUST
ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda Road, Maradana,
Colombo 09.
Tel. 011-2684851, Fax 011-2688102

# இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்

றவூப் ஸெய்ன்

மெல்லினம்

*Islamiya Eluchiyum Merkulahum (Tamil)*
*(9/11 Islamic Awakening and the west)*
*© Rauff Zain*
*First Indian edition: May 2005*

*Published by*

***Mellinam***
*9, Matha koil 2nd street,K.Pudur*
*Madurai 625 007. Tel:0452 2569930*
*email: mellinam@rediffmail.com*

*Typeset in Mellinam*
*Printed and bound in India*
*by Mani Offset, Chennai 5.*

***Price:** Rs.22*

# பொருளடக்கம்


முன்னுரை / 7

1. சமகால சர்வதேச அரசியல்: புரிந்துகொள்வதற்கான முற்குறிப்பு / 11
2. முஸ்லிம் உலகு: ஓர் அறிமுகம் / 14
3. பனிப்போரின் முடிவும் ஒரு துருவ உலகும் / 24
4. புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம் / 30
5. நவீன இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும் / 36
6. மேற்கத்திய ஊடகச் சொல்லாடல்களில் இஸ்லாமிய அடிப்படைவாதம் / 47
7. அமெரிக்க நூற்றாண்டின் முடிவும் வரலாறு விட்டு வைக்காத வெற்றிடமும் / 53
8. முஸ்லிம்களின் வெற்றி தாமதிப்பதேன்? / 61

உசாத்துணை நூல்கள் / 66

# முன்னுரை

மனித குலத்தின் தலைவிதியை
நிர்ணயிக்கும் கடமையை
இலக்கியம் மட்டுமே வெளிப்படுத்த முடியுமா?
நெருக்கடியான காலங்களில்
மனிதப் பேரழிவுகளின் இடையே
எழுத்தாளன் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரம் என்ன?
எழுத்தைத் தவிர வேறு வடிவங்களிலும்
தனது தார்மீகப் பாத்திரத்தை அவன் தேடுகின்றான் .
அவனது பாத்திரம் அவனது
இலக்கிய நேர்மையை உறுதி செய்கின்றது.
உயர்ந்த விழுமியங்களை நோக்கி
மனித இனத்தை அழைக்கின்றது.
சுதந்திரம்தான் அந்த விழுமியங்களில் உன்னதமானது.
எழுத்தாளர்கள் வார்த்தைகளை வளைப்பதில் வல்லவர்கள்
இருப்பினும் இரத்தம் பெருகும் மண்ணில்
சொற்பெருக்கு எதற்கு?
அணியலங்காரங்கள் எதற்கு?
எங்கள் சொற்கள் எளிமையானவை
எமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் போல.

- மஃமூத் தர்விஷ் (பலஸ்தீனக் கவி)

தர்விஷ் கூறுவது போன்று நெருக்கடியான காலங்களில், பேரழிவுகள் மனித இனத்தையே காயப்படுத்தும் கணங்களில் எழுத்தாளன் வகிக்கும் பங்கு எத்தகையது என்பது முக்கிய வினாவாகிறது. எழுத்து மிகவும் பலமானது என்பது எவ்வளவு பெரிய உண்மையோ அதனால் நாம் விரும்பிய அரசியலை வாழ வைக்க முடியும் என்பதும் ஒரு பெரிய உண்மை. இங்குதான் வெளிப்படைத் தன்மையும் அரசியல் தூய்மையும் நமக்குத் தேவைப்படுகின்றன.

நமது மனப்பரப்பின் அடியாழத்தில் புதையுண்டு கிடக்கும் இலட்சிய ஊற்றுகளின் கசிவு நமது பேனா முனைகளை உலுக்கும் போது எழுத்து சூல் கொள்கிறது. நமது சுதந்திர வேட்கையும் இலட்சியத் தாகமும் மட்டுமின்றி நமது புறச் சூழலில் மேலெழுந்து நம்மைப் பலமாகத் தாக்கும் அதிர்வுகளும் பல உதிர்வுகளை உண்டு பண்ணுகின்றன. அவற்றுள் எழுத்தே மிகவும் வலிமையானது.

இதனால் எழுத்து என்பது வார்த்தைகளின் வளைவு சுழிவும் மொழியின் முறிவும் உடைவும் என்பதைக் கடந்து ஏதோவொரு இலக்கை நோக்கி நீட்சி பெறுகின்றது. அது வகிக்கும் பங்கு பல்வேறு தளங்களில் மெல்லியதாய் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

சிலபோது மௌனங்களின் உடைவாகவும் பின்னடைவுகளின் மரணமாகவும் அது உயிர்த்தெழுகிறது. நமது கண்ணில் மிதக்கும் கனவுகளையும் நெஞ்சில் நிறையும் இலட்சியங்களையும் அது பிரதிபலிக்கின்றது. ஒடுங்கியும் ஒடுக்கப்பட்டும் அடங்கியும் அடக்கப் பட்டும் வாழும் மனித குலத்தின் மன்றாட்டங்களைக் கூட அது பிரதி செய்கிறது. சுரண்டல், சர்வாதிகாரத்தைக் காணும்போதும் நமது அகவெளியில் கொப்பளித்துக் கொண்டு வெளியே பாயும் கோபக் கனல்களாகவும் சிலவேளை அது வெளிப்படுகின்றது. இவ்வகையில் எழுத்து வரலாற்றின் இயங்கு திசையை மாற்றியமைக்கும் பேராற்றல் கொண்ட ஆயுதம் என்பதில் நாம் நகர்த்த முடியாத நம்பிக்கை கொள்கின்றோம்.

என்னைப் பொறுத்தமட்டில் எழுத்தின் மூலமும் இயங்கியலும் இப்படித்தான் நிகழ்கின்றது என உறுதியாக நம்புகின்றேன். இந்தப் பின்னணியிலேயே எழுதி வருகின்றேன். இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும் என்ற இந்நூலும் அத்தகைய ஒரு எழுத்தியக்கத்தைப் பிரதிபலிக்கும் எனக் கருதுகின்றேன்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே வீறுகொண்ட இஸ்லாமிய எழுச்சி அதன் இறுதி எல்லைகளைக் கடந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில் பல்வேறு நெருக்கடிகளுக்கு அது முகங்கொடுத்து வருகின்றது. இஸ்லாமிய ஆட்சி(கிலாபத்) என்ற அதன் உச்ச இலக்கை எட்டுகின்ற பாதையில் மூன்று முக்கியமான காரணிகள் தடையாக உள்ளன. இஸ்லாமிய சக்தியைக் கண்டு அஞ்சும் மேற்குலகம் அவற்றுள் முதலாவது காரணி. முஸ்லிம் உலகின் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் தேசியவாத கொடுங் கோலர்கள் இரண்டாவது காரணி எனலாம். தென்மேற்கு ஆசியா வின் ஆட்சியில் நீண்டகாலமாகவே நிலைத்திருக்கும் தலையாட்டி பொம்மைகள் மூன்றாவது காரணியாக உள்ளனர்.

உண்மையில் செப்.11 சமகால சர்வதேச அரசியலின் போக்கு களை மாற்றிவிட்டதாகக் கற்பிதம் செய்யப்படும் கட்டுக்கதை நம்மில் பலரை தவறான பார்வைக்கு இட்டுச் சென்றுள்ளது. நிகழ்வுகளை மேலோட்டமாகவும் சில்லறைத்தனமாகவும் விளங்க முயன்றவர்கள் முஸ்லிம் சமுதாயத்தின் மீது மேற்கொள்ளப் படும் மேற்குலகின் இராணுவத் தாக்குதல்களைக் கண்டு விரக்திப்பட்டு

நிற்கின்றனர். இந்த எதிரும் புதிருமான இரண்டக நிலையிலிருந்து சரியான புரிதலுக்கு வரவேண்டிய தேவை வலுக்கின்றது.

இவ்வகையில் கிலாஃபத்தின் பூமியை விட்டும் வெகு தொலை வில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் சமகால முஸ்லிம் உலகு முகங்கொடுக்கும் இந்நெருக்கடிகளை எவ்வாறு நோக்குகின்றனர் எவ்வாறு நோக்க வேண்டும் என்பது தொடர்பான சில கவன ஈர்ப்புகளையும் ஆய்வுக் குறிப்புகளையும் இந்நூல் முன்வைக்க முனைகிறது. குறிப்பாக மேற்குலகு கையாண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளின் பின்னணி அரசியலைப் புரிந்துகொள் வதற்கான ஓர் எளிய பாதையை இந்நூல் வரைந்து காட்ட முயல்கின்றது.

நிறையவே எழுத வேண்டும் என்று நினைப்பதுண்டு. எனினும் பாலைவனத் தூறல் போல் எதிர்பாராத விதமாய் ஒரு புத்தகக் கனவு நனவாகின்றது. வாழ்வில் மரம் வளர்க்க வேண்டும்; மணம் முடிக்க வேண்டும்; புத்தகம் எழுதவேண்டும் இவை மூன்றும் ஒரு மனிதனின் சராசரிச் சாதனைகள் என்று ஒரு நண்பர் அடிக்கடி என்னிடம் கூறுவார். மரம் வளர்க்கலாம்; மணமும் முடிக்கலாம்; ஆனால் புத்தகம் வெளியிடுதல் என்பது அவ்வளவுக்கு எளிதானது அல்ல. ஒரு புத்தக வெளியீட்டுப் பாதையில் ஏகப்பட்ட நெருக்கடிகள் நம்மைக் குறுக் கிடுகின்றன. நிதிப் பிரச்சினை என்பது ஓர் எழுத் தாளனை எப் பொழுதும் நிழல் போல் தொடரும் ஒரு பெரும் இடையூறு. அதிலும் நம்மைச் சுற்றிச் சுற்றி வரும் அனைத்து வகை அரசியலுக்கும் அப்பாற்பட்டு சுதந்திரமாக எழுவது என்பது மிகவும் கடினமானது.

பெண்ணாக இல்லாமலே பெரும் பிரசவ வேதனையை உணர்ந்த அனுபவம் இம்முயற்சியில் எனக்குக் கிடைத்தது. எனினும் இடை யறாத தேடலும் ஆய்வு முயற்சியும் தரும் மன ஆறுதல் எல்லா வற்றையும் விட உயர்ந்து நிற்கிறது. நூல் வெளியீடு என்பது ஒரு சுகப் பிரசவம். நெல்லிக்கனி உண்ணும் அனுபவம். மரங்களை நடுதல், மணம் முடித்தல் என்பவற்றுக்கு அப்பால் நமது வாசிப்பும் கருத்து களும் பார்வையும் மக்களைச் சென்றடைவதில் உள்ள ஆத்ம திருப்தியே எல்லாவற்றிலும் மேலோங்கி நிற்கிறது. இந்நூல் வெற்றி கரமாக வெளிவருவதற்குத் துணை நின்ற அனைவரையும் நிறைந்த நெஞ்சுடன் நினைவு கூர்கின்றேன்.

றவூப் ஸெய்ன்

*116,* பாடசாலை வீதி
இறக்காமம்,
இலங்கை.

# சமகால சர்வதேச அரசியல்: புரிந்துகொள்வதற்கான ஒரு முற்குறிப்பு

கடந்த 2001 செப்டம்பர் 11இல் அமெரிக்க இராணுவத் தலைமையகம் மற்றும் உலக வர்த்தக மையம் என்பவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சமகால சர்வதேச அரசியலின் முகத்தையே முற்றிலும் மாற்றிவிட்டது. எந்தவொரு அரசியல்-வரலாற்றுத்துறை மாணவனும் இந்த நிகழ்வைப் புறக்கணிக்க முடியாதளவு அது இந்நூற்றாண்டின் ஒரு முக்கிய நிகழ்வாகிவிட்டது. இனி வரும் சில நூற்றாண்டு களுக்குப் பின்னரும் இந்நிகழ்வு குறைந்தபட்சம் வரலாற்றுத்துறை மாணவர்களாலேனும் நினைவு கூறப்படும்.

இன்று நம்மைச் சூழவும் நமக்கு வெளியிலும் வேகமாக மாறுதல் அடைந்து வரும் அரசியல் செல்நெறிகளில் அந்த நிகழ்வு முக்கிய பாத்திரத்தை வகித்து வருகிறது. 2001க்குப் பின்னர் ஆப்கான் மீதும் ஈராக் மீதும் அமெரிக்கத் தலைமையில் இரு ஆக்கிரமிப்பு யுத்தங் களும் நடந்தேறிவிட்டன. அதனால் ஏற்பட்ட இழப்புகள், மனித அழிவுகள், அனர்த்தங்கள் மிகப் பாரியவை. அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புப் போரை ஈராக்குடன் நிறுத்திக்கொள்ளவில்லை. சிரியா, ஈரான், சூடான், லிபியா, யெமன் என்று பல முஸ்லிம் நாடுகளைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

செப்டம்பர் 11க்குப் பிந்திய மேற்கத்திய ஊடகங்களின் சொல் லாடல்கள்(Discourse) பெரும்பாலும் இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய தீவிரவாதம் என்பவற்றையே குவிமையப்படுத்தும் அளவுக்குத் தொடர்ந்து ஒரு ஊடக யுத்தத்தை முஸ்லிம் உலகுக்கெதிராக முடுக்கி விட்டுள்ளது.

இதுவரை அமெரிக்கர்கள் தமது தேசிய எல்லைகளையே உலகத்தின் எல்லைகளாகக் கருதி வந்தனர். தமது தேசிய ஜனநாயகத்தையும் ஆட்சி இயந்திரத்தையும் மட்டுமே உன்னதமாகவும் உயர்வாகவும் நம்பி இருந்தனர். இவ்வாறு மேற்கத்திய ஊடகங்களின் புனைவு களுக்குள் கட்டுண்டுபோன அமெரிக்கர்கள் இப்போது தமக்கு வெளியே பரந்து விரிந்து கிடக்கும் சர்வதேச சமூகங்களையும் எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளனர். அவர்களது அரச இயந்திரம் கைக்கொள்ளும் ஜனநாயகத்தின் மீது அவர்களுக்கு சந்தேகமும், திருப்தியின்மையும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் ‘பயங்கரவாதத்துக்கு

எதிரான யுத்தத்தை' அவர்களது 'ஜனநாயக அரசு' இன்னும் நிறுத்திய தாகத் தெரியவில்லை.

தற்போது பயங்கரவாதத்திற்கெதிரான அமெரிக்கப் போரில் வேறு சில மேற்கு நாடுகளும் இணைந்துள்ளமை மிகுந்த ஆச்சரியத்துக் குரியது. மேற்கு மட்டுமின்றி சில முஸ்லிம் நாடுகளும் அதற்கு முழு ஆதரவளித்து வருகின்றன. இத்தாலி, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஸ்பெய்ன் போன்ற மேற்கு நாடுகளும் மத்திய கிழக்கில் சில முஸ்லிம் அரசுகளும் இதற்குத் துணை நிற்க முன்வந்துள்ளன.

ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் வெறும் புனைவுகள் என்பது சர்வதேச சமூகத்துக்குப் புலனாகிவிட்டது. பேரழிவு தரும் ஆயுதங்கள் (WMD) எதுவும் ஈராக்கில் இருப்பதற்கான தடயங்களைக் கூட ஆயுத பரிசோதனைக் குழு கண்டுபிடிக்கவில்லை. கள யதார்த்தங்கள் இவ்வாறிருக்க அமெரிக்கா புதியதொரு இராணுவத் தாக்குதலை ஆரம்பித்திருப்பதற்குப் பின்னணியில் உள்ள உண்மையான காரணிகள் எவை என்பது முக்கிய வினாவாகின்றது.

இங்குதான் சமகால சர்வதேச அரசியல் சூழலை மேலோட்டமாக நோக்கும் எவரும் குழம்பிப் போய் விடுகிறார்கள். நிகழ்வுகளும் அரசியல் காய் நகர்த்தல்களும் மிகவும் சிக்கல் வாய்ந்தவையாக மாறிவருகின்றன. குறிப்பாக செப்டம்பர் 11க்குப் பிந்திய சர்வதேச அரசியல் தளத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதில் நம்மில் பலர் தவறிழைத்து விடுகின்றனர். சிலபோது வெகுவாக மாற்றமடைந்துவரும் இந்த சமூக, அரசியல் நிகழ்வோட்டங்கள் நமக்குள் பெரும் கருத்து மயக்கத்தையும் மனக் குழப்பத்தையும்கூட உண்டுபண்ணி விடுகின்றன.

இடதுசாரிகள் எந்தவொரு பொருளாதார அரசியல் நெருக்கடியை யும் தமது மார்க்ஸியக் கண்ணோக்கில் பார்க்கிறார்கள். அவர்களது கருத்து முகாம்களைச் சார்ந்து வெறும் வர்க்க நிலைப்பட்ட கோணத் திலேயே எதனையும் புரிந்துகொள்கின்றார்கள். இது அவர்களது கருத்தியல் சுதந்திரத்தோடு தொடர்பானது. மேற்குலகுக்கும் முஸ்லிம் உலகுக்குமிடையிலான மோதல் மார்க்ஸியவாதிகளின் பார்வையில் வெறும் முதலாளித்துவ, மூன்றாம் உலக நாடுகளின் நெருக்கடியே. சுரண்டும் முதலாளித்துவ சக்திக்கும் சுரண்டப்படும் மூன்றாம் உலகிற்குமிடையிலான ஆதிக்கப் போராக மட்டுமே அவர்களால் பார்க்கப்படுகிறது.

ஆனால் ஒரு முஸ்லிமின் பார்வை அதனை விடவும் வேறுபட்டது. கிறிஸ்தவ மேற்குலகிற்கும் பொருளாதார வளம் கொழிக்கும் முஸ்லிம்

உலகிற்குமிடையில் வளர்ந்துவரும் வரலாற்று மோதல்களின் மூல உந்துதல் பொருளியல் காரணிகளே என்பதில் கருத்து மாறுபாடுகள் நமக்கில்லை. ஆனால் அதையும் தாண்டி நீட்சி பெறும் வரலாற்று, சமய, புறநிலைக் காரணிகளை நாம் புறந்தள்ளி விட்டு சமகால அரசியல் நெருக்கடியை நோக்குவது ஒரு சுருங்கிய பார்வையையே நமக்குத் தரும்.

முஸ்லிம் தனது வாழ்வியல் பிரச்சினைகளோடு மட்டும் தன்னைச் சுருக்கிக் கொள்பவனல்ல. அவனுக்கு வெளியில் அவனது சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் பற்றிய தெளிவான புரிதலும் அவனுக்கு வேண்டும். ஒடுங்கியும் ஒடுக்கப்பட்டும் அடங்கியும் அடக்கப்பட்டும் வாழும் சமூகங்கள் பற்றிய மனித நேய உணர்வுகள் அவனுக்குள் ஊற்றெடுப்பது போலவே தனது சமூகத்திற்கெதிரான சவால்களையும் ஒரு விரிந்த கண்ணோட்டத்தில் அவன் பார்க்கிறான்.

இவ்வகையில் சமகால முஸ்லிம் உலகையும் மேற்கின் இந்த இராணுவ நடவடிக்கைகளையும் ஒரு முஸ்லிம் எவ்வாறு நோக்கு கின்றான். அது குறித்த மிகச் சரியான புரிதல் (Better Understanding) அவனுக்கு எவ்வாறு ஏற்பட முடியும் போன்ற கேள்விகள் முக்கியமாகின்றன.

முஸ்லிம் உலகின் மீது அமெரிக்க வலதுசாரி அயோக்கியத் தனம் கட்டவிழ்த்துள்ள இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், அமெரிக்காவின் மீதும் அதன் கூட்டுச் சக்திகள் மீதும் ஒருபுறம் ஆத்திரத்தை மூட்டுகின்றன. இன்னொரு புறம் இந்த நிகழ்வுகளை மிகவும் மேலோட்டமாகப் பார்த்துப் பழக்கப்பட்டவர்களுக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்மை கூட ஏற்பட்டு விடுகின்றது.

சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் எந்த விவகாரத்திலும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அக்கறையும் கரிசனையும் உள்ளதுபோலவே அவனைச் சூழ அவனது சமூகத்திற்கெதிராக நிகழும் அவலங்களையும் துயரங்களையும் அவனால் பொறுத்துக்கொள்ள முடியாது. இது அவன் ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கை அவனுள் போதிக்கும் ஓர் உன்னத போதனை. இக்கொள்கைப் பின்னணியில் நின்றே ஒரு முஸ்லிம் சர்வதேச அரசியல் பின்னணியைப் புந்துகொள்ள முயல வேண்டும். அதற்கானதொரு எளிய பாதையை இந்நூல் வரைந்து காட்ட முயல்கின்றது.

# முஸ்லிம் உலகு: ஓர் அறிமுகம்

*சர்வதேச விவகாரங்களைப் புரிந்துகொள்ளும் வழிகள் குழம்பும் போது அல்லது அங்கு ஏதாவது விடயம் எனக்குத் தெளிவற்றதாகி சர்வதேச விவகாரங்களின் அடிப்படைகளே ஆட்டம் காண்பதாகத் தோன்றும்போது நான் வரலாற்றிடமும் புவியியல் உண்மை களிடமும் தஞ்சம் புகுவேன். பெரும்பாலும் என் குழப்பங்களுக்கு அங்கே முக்கியத்துவம் வாய்ந்த விடைகள் கிடைக்கும்.*[1]

*– கலாநிதி தாரிகுல் பிஷ்ரி (எகிப்திய அரசியல் சிந்தனையாளர்)*

**தா**ரிகுல் பிஷ்ரி குறிப்பிடுவது போன்று உலகளாவிய முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் நிகழ்வொன்றை நம்மால் புரிந்துகொள்ளக் கடினமாகும்போது இரு விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். முதலாவது: உலகப்படத்தை கவனமாக உற்று நோக்கி முஸ்லிம் சமூகம் வாழும் பிராந்தியங்களின் பொருளாதார முக்கியத் துவம் யாது என்பதைப் புரிந்துகொள்ளல் வேண்டும். இரண்டாவது, கடந்த ஒரு நூற்றாண்டுகால உலக அரசியல் வரலாற்றை மேலோட்ட மாகவேனும் பின்னோக்கிப் பார்த்தல் வேண்டும்.

நாம் உலகப்படத்தை விரித்து வட முனையிலிருந்து தென்பகுதி கடல் வரை நோக்குவோம். இஸ்லாமிய சமூகம் எங்கு விரவிக் காணப்படுகின்றது? முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட அல்லது கணிசமான முஸ்லிம் விகிதாச்சாரத்தைக் கொண்ட சமூகங்கள் எந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்றன? என்பதை ஓரளவு கவனத்துடன் நோக்குவோமாயின் சில அடிப்படை உண்மைகள் நமக்குப் புலனாகும்.

கண்டங்களின்(Continental) அடிப்படையில் நோக்கும்போது, இஸ்லாம் ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதி முழுவதிலும் - தென்மேற்கு தவிர - அடர்த்தியாகவும் செறிவாகவும் பரவியுள்ளமையைக் காணலாம்.

அதாவது ஜிப்ரால்டர் வளைகுடா முதல் நைஜீரியா வரையிலும் கிழக்குப் புறமாக எகிப்து முதல் சோமாலியா வரையிலும் இஸ்லாமிய சமுதாயம் உயிர் வாழும் நிலப் பிராந்தியங்கள் நீண்டு செல்வதைக் காணலாம். ஐரோப்பாவில் பால்கன் பிராந்தியத்தில் சில பகுதிகளில்

1. *உம்மத்தி பில் ஆலம் அல் முஜ்தமா இதழ் 1427, பக்.18*

விரிந்து பின்னர் கிழக்காக கருங்கடலை உள்ளடக்கி வடக்கே அரபுத் தீபகற்பத்தின் தெற்குவரை அந்த இஸ்லாமியப் பிராந்தியம் விரிவடைந்துள்ளது.

கிழக்கே ஆசியாவின் மத்திய பகுதி குடியரசுகளை உள்ளடக்கி வடக்கே இந்தியாவின் நடுப்பகுதி வரை சென்று இந்தியாவின் தெற்கு வரை ஓரளவு நீண்டு செல்கின்றது. பின்னர் கிழக்காகத் திரும்பி மங்கோலியா மற்றும் சீனாவின் மேற்குவரை செல்கின்றது. பின்னர் தெற்காக இறங்கி கிழக்கிந்தியத் தீவுகள் வரை அது நீள்கின்றது.

சர்வதேச அளவில் முஸ்லிம் சமுதாயம் வாழும் பிராந் தியங்களின் பொருளாதார, அரசியல் மற்றும் கேந்திர முக்கியத் துவத்தினைக் கவனமாக விளங்கிக் கொள்ளும்போது ஏன் முஸ்லிம் சமூகம் வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களிலும் மேற்கின் ராணுவ, அரசியல் சவால்களைச் சந்திக்க நேர்கின்றது என்பதற்கான தெளிவான விடை நமக்குக் கிடைத்துவிடும்.

முஸ்லிம்கள் தம் வசம் வைத்துள்ள நிலப்பகுதி ஒரு அகன்ற 'பெல்ட்' போன்று காட்சியளிக்கின்றது. உலக வரைபடத்தை மிக மேலோட்டமாக நோக்கும்போதே இதை அறிந்துகொள்ளலாம். மேலும் இப்பிராந்தியங்கள் தெற்கே அகன்ற சமுத்திரப் பிரதேசங் களை நோக்கி நீட்சி பெறுவதையும் காணலாம்.

இஸ்லாம் கருங்கடற் கரையோரத்தின் பெரும் பகுதியையும் மத்திய தரைக் கடற்கரையோரங்களில் மூன்றில் இரு பகுதிகளையும் செங்கடலினதும் பாரசீக வளைகுடாவினதும் அனைத்துக் கடற்கரைப் பகுதிகளையும் உள்ளடக்கியிருக்கின்றது. இப்பிராந்தியங்களில் - இடைக்கிடையே சில சமூகங்கள் வாழ்ந்தாலும் - வேறெந்த சமூகத் தாலும் பிரிக்கப்படாத நீண்ட பெரும் பிராந்தியமாக விளங்குவதைக் காணமுடியும்.

இஸ்லாம் ஆசியாவை ஆளும் மூன்று சக்திகளில் ஒன்றாக விளங்குகின்றது. இஸ்லாம், இந்தியா, சீனா என்பவையே அவை. இஸ்லாம் ஆப்பிரிக்காவை ஆளும் மூன்று சக்திகளுள் ஒன்றாகவும் மிளிர்கின்றது. இஸ்லாம், அரபிகள், கறுப்பர்கள் என்பவையே அம்மூன்று சக்திகளும். [2]

இஸ்லாம் ஆப்பிரிக்காவில் கறுப்பர்களுக்கும் அரபிகளுக்கு மிடையிலான தொடர்பூடகமாகவும் உள்ளது. ஆப்பிரிக்காவின் மேற்காயினும் கிழக்காயினும் நிலைமை இதுவே. ஒப்பீட்டு ரீதியில் நோக்கும்போது 1650 - 1950 வரையான மூன்று நூற்றாண்டுகளில் பொதுவாக உலகிலும் சிறப்பாக அமெரிக்காவிலும் இஸ்லாம்

வேகமாகப் பரவிவரும் சக்தியாக விளங்குகின்றது என Social order of Islam என்ற நூலில் கலாநிதி ரொபின் லீபி என்பவர் குறிப்பிடுகின்றார்.[3]

இக்காலப்பிரிவில் ஆப்பிரிக்காவின் மத்திய பகுதிவரை இஸ்லாம் பரவி மேற்கே நைஜீரியா, கென்யா என்பவற்றிலும் கிழக்கே மொஸாம் பிக் வரையிலும் பரவியது. ஆசியாவின் மத்திய பகுதியிலிருந்து அதன் வடக்கையும், கிழக்கையும் இணைக்குமளவுக்கு இஸ்லாம் விரவியது. இம்மூன்று நூற்றாண்டுகளிலும் ஐரோப்பாவின் பால்கன் பிராந்தியத்தின் சிற்சில பகுதிகள் தவிர உலகில் வேறெங்கும் அது பின்வாங்கவில்லை.

இருபதாம் நுற்றாண்டின் தொடக்கம் முதல் இஸ்லாம் என்ற சக்தி மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவியதும் ஒரு முக்கிய அம்சம் எனலாம். அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவிவரும் (The fastest growing religion) மதம் என்றும் 2010இல் அமெரிக் காவில் இஸ்லாம் கிறிஸ்தவத்திற்கு அடுத்த சக்தியாக விளங்கும் எனவும் அமெரிக்க ஆய்வாளர்கள் முன்பே கூறியிருந்தனர். ஆனால் 2000ஆம் ஆண்டிலேயே இஸ்லாம் அமெரிக்காவின் இரண்டாவது சக்தியாகவும் முஸ்லிம்கள் இரண்டாவது பெரும்பான்மையின ராகவும் மாறியுள்ளனர். இன்று அமெரிக்க முஸ்லிம் சிறுபான்மை யினரின் எண்ணிக்கை 10 மில்லியனையும் தாண்டியுள்ளது.

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் முஸ்லிம் கவுன்சிலின் (BMC-BRITISH MUSLIM COUNCIL) கணிப்பின்படி 2003இல் உலக முஸ்லிம் மக்கள் தொகை 150 கோடியாகும்.[4] Community News and Reviews என்ற கலைக் களஞ்சியம் உலக முஸ்லிம் மக்கள் தொகை பற்றிய விபரத்தை தனது எட்டாவது தொகுதியில் 1.9 பில்லியன் என (190 கோடி) குறிப் பிட்டுள்ளதும் இங்கு கவனிக்கத் தக்கது. இன்று உலகிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 1/4 பங்கு முஸ்லிம்களாவர். அதாவது நான்கு பேரில் ஒருவர் முஸ்லிம் என்பதே அதன் அர்த்தம். சுமார் 54 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் உள்ளன. அதுபோன்றே உலகின் ஏனைய அனைத்து நாடுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்றனர். பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இரண்டாவது சிறுபான்மையாக வாழ்கின்றனர்.

**முஸ்லிம் நாடுகளின் பிராந்திய, பொருளாதார முக்கியத்துவம்**

**1. மத்திய கிழக்கு [தென்மேற்கு ஆசியா]**

இஸ்லாமிய சமுதாயத்(உம்மத்)தின் புவியியல், பொருளாதார

2,3. மேலது பக்கம் 19

4. In the Name of Islam - The Economist Vol. 368 Num. 8341 Sep. 13 -19, 2003 P.04

கேந்திரத் தளத்தின் முக்கியத்துவத்தை ஓரளவு விரிவாகவே விளக்குவது பயனுள்ளதாய் அமையும். இது பற்றிய தெளிவான புரிதலும் பின்னணி அறிவும் சமகால அரசியலைப் புரிந்துகொள்ளப் பெருமளவு துணை செய்யும். ஏனெனில் மேற்குலகு வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் முஸ்லிம் உலகை நோக்கி பசித்த பிராணிகள் உணவுத் தட்டை நோக்கிப் பாய்வது போன்று பாய்ந்து அதனை ஆக்கிரமித்து ஏப்பம் விட முனைவதற்கான காரணத்தை அப்பொழுதே மிகச் சரியாகப் புரிந்துகொள்ளலாம்.

முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழும் பிராந்தியம் தென்மேற்கு ஆசியா. வழக்கில் மத்திய கிழக்கு என்றும் அதனைக் குறிப்பிடலாம். முழு உலகிலும் அபரிமிதமான பொருளாதார வளம் வாய்ந்ததொரு பிராந்தியமாக இது விளங்குகின்றது. சுமார் 12 முஸ்லிம் பெரும் பான்மை நாடுகளைக் கொண்ட இப்பிராந்தியத்தில் ஏறத்தாழ 300 மில்லியன் (284.4 மி) அரபு - முஸ்லிம்கள் வாழ்கின்றனர். நாம் இப் பிரதேசத்தைச் சூழ அருள்பாலித்திருக்கிறோம் என்று அல்குர்ஆன் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

உலக பெட்ரோலிய வளத்தில் 70%ஐ இம்முஸ்லிம் பிராந்தியமே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்குலகு கைத்தொழில் - விஞ்ஞானத்துறையில் மாபெரும் வளர்ச்சியடைந்துள்ள போதிலும் விரும்பியோ விரும்பாமலோ அது இஸ்லாமிய நிலங்களிலுள்ள பெட்ரோலியத்தின் மீதே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இந்த அடிப்படை உண்மையை நாம் மிகக் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியிலேயே அமெரிக்கா ஈராக் மீது மேற் கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் ஆயுதப்போரையும் நாம் பார்க்கின்றோம். அமெரிக்கத் தலைமையில் மேற்கொள்ளப் படும் 'பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின்' உள்நோக்கம் தென் மேற்கு ஆசியாவின் பெட்ரோலிய வளத்தைச் சுரண்டி தமக்குள் பங்கு போட்டுக் கொள்வதே.

அமெரிக்கப் பொருளியல்துறை ஆய்வாளர் ஜெரிமி ரிஃப்கின் (Jeremy Rifkin) தம்முடைய ஹைட்ரஜன் பொருளாதாரம் (Hydrogen Economy) என்ற நூலில் தரும் சில தரவுகளை மேற்கோளாக முன்வைப்பது இக்கருத்தின் பரிமாற்று வசதிக்குப் பொருத்தமாக அமையும். குறிப்பாக தென்மேற்கு ஆசிய நாடுகளின் பெட்ரோலிய வளம் குறித்து அவர் தரும் புள்ளிவிபரங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை[5]:

''அமெரிக்காவில் கிடைக்கப்பெறும் எண்ணெய் வளம் (பெட்ரோலியம்) அடுத்த 10 ஆண்டுகளுக்கே நிலைத்து நிற்கும்.

*எதிர்வரும் ஒரு பத்தாண்டிற்குப் பின்னர் அமெரிக்காவின் கைத்தொழில்துறை வளர்ச்சி வேகத்தோடு ஈடு கொடுக்கும் அளவுக்கு பெட்ரோலியத்தைப் பெறுவது அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் மிகப் பாரிய சவாலாக மாறிவிடும். இந்தப் பின்னணியிலேயே பெட்ரோலிய வளமிக்க பிராந்தியமொன்றை ஆக்கிரமிப்பது அதன் உடனடித் தேவையாகவும் அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதன்மையானதாகவும் இருந்து வருகின்றது.''*

*தற்போதைய பெட்ரோலிய உற்பத்தியளவுடன் ஒப்பிடுகையில் ஈரான் அடுத்துவரும் 53 வருடங்களுக்கு இத்துறையில் ஈடுபடலாம். ஸவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் முறையே அடுத்துவரும் 55, 75, 116 வருடங்களுக்குப் பெட்ரோலிய உற்பத்தியிலும் ஏற்றுமதிப் பொருளாதாரத்துறையிலும் வருமானம் ஈட்டலாம். ஆனால் ஈராக்கின் பெட்ரோலிய சுத்திகரிப்பும் ஏற்றுமதியும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இரண்டாவது இடத்தை வகிக்கின்ற போதும் அடுத்த 526 வருடங்களுக்கான பெட்ரோலிய சேமிப்பு மையங்களை அந்நாடு கொண்டுள்ளது.[6]*

*இதிலிருந்து அமெரிக்காவின் 'பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின்' நேர்மையையும் அதன் உள்நோக்கத்தையும் அதற்காக ஜோடனை செய்யப்பட்டு ஊடகங்களில் பிரச்சாரம் செய்யப்படும் கபட நாடகங்களையும் நாம் இலகுவில் புரிந்துகொள்ளலாம் அல்லவா? (இது பற்றிய விரிவான ஆய்வுக் குறிப்புகளைப் புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம் என்ற அத்தியாயத்தில் காண்போம்.)*

**2. மத்திய ஆசியா** (Asia the minor)

*மொத்தமாக ஆறு முஸ்லிம் குடியரசுகளை (உஸ்பெகிஸ்தான், தாஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், கிர்கிஸ்தான், கஸகிஸ்தான், அஸர்பைஜான்) உள்ளடக்கிய இப்பிராந்தியத்தில் ஏறத்தாழ 50 மில்லியன்(48.5) முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.[7] உலக நிலப் பிராந்தியங்களில் கணிசமான பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த வளமான பகுதியாக இது விளங்குகின்றது. விவசாய, கால்நடை வளர்ப்புக்கு ஏதுவாக நில அமைப்பைப் பெற்றுள்ள இந்நாடுகள் பெட்ரோலியம் மற்றும் வாயு(Gas) உற்பத்தியிலும் ஓரளவு முன்னிலை வகிக்கின்றன.*

---

5. Ameen Izzadeen, If it is oil why Iraq, Daily mirror 2003 Feb.
6. மேலது

கோதுமை, அரிசி, பருத்தி, தானியங்கள், பழவகைகள், கம்பளி, இறைச்சிக்கான கால்நடை வளர்ப்பு என்பனவற்றில் முழு உலகத் தேவைகளில் 30 சதவீதத்தை இப்பிராந்தியமே நிறைவு செய்கின்றது. இவை தவிர பெட்ரோலியம், வாயு, நிலக்கரி, இரும்பு போன்றனவும் இந்நாடுகளில் கணிசமானளவு கிடைக்கின்றன.

வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கையில் ஏற்கனவே ரஷ்யா இப்பிரதேசங்களின் வளங்களைத் தனது தேசிய நலன் களுக்காக நன்கு பயன்படுத்தி வந்ததை அவதானிக்கலாம். 1917இல் ரஷ்யப் புரட்சி நடந்து 5 வருடங்கள் கழிந்த நிலையில் 1922இல் காக்கஸஸ் மலைக்கு அப்பாலுள்ள பிராந்தியம் (Trans Caucasian Region) என்றழைக்கப்பட்ட இம்முஸ்லிம் பகுதிகள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டு விரிந்த சோவியத் யூனியன் நிறுவப்பட்டது.

இந்த இணைப்புத் திட்டத்திற்கு ஸ்டாலின் தலைமை தாங்கினார். ரஷ்யா சுமார் அரை நூற்றாண்டு காலம் மாபெரும் வல்லரசாக மேலோங்கியமைக்கு இந்தப் பிராந்தியங்களின் பொருளாதார வளங்களும் பெருமளவு உதவின. ஆனால் 90களில் சோஷலிஸப் பேரரசின் உடைவுடன் இப்பிராந்தியங்கள் மீண்டும் தனித்தனிக் குடியரசுகளாகப் பிரிந்துபோயின.

மிக நீண்டகாலமாகவே அமெரிக்காவும் பிற ஐரோப்பிய நாடுகளும் மத்திய ஆசிய உள்விவகாரங்களில் தலையிட்டு வருகின்றன. இப்பிராந்தியத்தில் தமக்குத் தேவையான பொருளாதார, அரசியல் நலன்களை அடைந்து கொள்வதில் இவை குறியாக செயல்பட்டு வருகின்றன. தற்போது இவற்றிலுள்ள பெரும்பாலான குடியரசு களில் மதச்சார்பற்ற தலையாட்டி பொம்மைகள் அமர்த்தப்பட்டு மேற்குலகுக்குச் சார்பாக இயங்கி வருகின்றார்கள். மத்திய ஆசியாவில் இஸ்லாம் வேகமாக வளர்ந்து வருவதை சி.ஐ.ஏ.கட்டுப்படுத்தி வருகின்றது. இங்குள்ள ஆட்சியாளர்கள் பலரைத் தம் கைக்கூலிகளாக வைத்து இஸ்லாமிய இயக்கங்களை மட்டுமன்றி சாதாரண ஆன்மீக செயல்பாடுகளில் ஈடுபடுவோரையும் கூட ஒடுக்கி வருகின்றனர். உஸ்பெகிஸ்தான் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மத்திய ஆசியாவின் சில பல்கலைக்கழகங்கள் சி.ஐ.ஏ. (C.I.A.) வுடன் இரகசியமாக இணைக்கப்பட்டுள்ளன. 1994இல் அமெரிக்க அரசியல் செயலாளர் ஜேம்ஸ் பேகர் இப்பிராந்தியத்திற்கு வருகை தந்திருந்தார். அச்சமயத்தில் அமெரிக்க அரசின் சோவியத் இனங் களுக்கான ஆய்வு நிபுணரான பவ்ல் கொப்லே,

---

7. The Muslim Council of Britain - The Economist Vol. 368, Num.8341, Sep.2003 P.09.

''தற்சமயம் இந்தக் குடியரசுகளுக்கு முக்கியமாக பொருளாதார, தொழில்நுட்ப உதவிகள் தேவைப்படுகின்றன. நமது செல்வாக்கைப் பதிப்பதற்கு இது நமக்கோர் அரிய சந்தர்ப்பம்''

என்று கூறியிருந்தார்.

இந்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, இஸ்ரேல், சீனா என்பவை தலையிட்டு வருகின்றன. எகிப்து, சிரியா, லிபியா போன்ற நாடுகளின் ஆட்சியாளர்களைப் போன்றே இங்கும் இஸ்லாமிய வாதிகள், இஸ்லாமிய இயக்கங்கள், இஸ்லாத்தை நன்கு பின்பற்று பவர்கள் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்த அபாயத்தை கலாநிதி ஹாமித் ரபீஉ அவர்கள் 1970களிலேயே முன்னறிவிப்பு செய்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. அதாவது 1990களின் முதற்கூறுகளில் சோவியத் யூனியன் உடைந்து முஸ்லிம் பிராந்தியங்கள் தனித்தனித் தேசிய அரசுகளாகப் பிரிந்து போகும். அப்பொழுது அதனைக் காப்பதற்கான பொறுப்பை முஸ்லிம் சமூகம்(உம்மத்) ஏற்கவேண்டும். இல்லையேல், மேற்கு சக்திகளின் ஊடுருவல் அங்கு தவிர்க்க முடியாதது என்பதே ரபீஉ அவர்களின் முன்னறிவிப்பு, அந்த அற்புதமான முன்னறிவிப்பு இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருப்பது மிகவும் வாய்ப்புக் கேடாகும்.

**3. ஆப்பிரிக்கக் குடியரசுகள்**

2002ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மக்கள்தொகைக் கணிப்பின்படி ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஏறத்தாழ 250 மில்லியன் (254மி) முஸ்லிம்கள் வாழ்கின்றனர். உலகிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் பெரும்பான்மைக் கண்டம் எனக் கருதப்படும் அளவுக்கு சுமார் 25க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் இங்கு அமையப் பெற்றுள்ளன. 18ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை ஆப்பிரிக்கா உலகில் மிகப் பெரும் வளம் கொழிக்கும் தேசமாக விளங்கியது. அப்போது உலகின் மொத்த தங்க உற்பத்தியில் 30% ஐயும் வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு போன்ற ஏனைய உலோக உற்பத்தியிலும் ஆப்பிரிக்காவே முன்னணியில் நின்றது.

இன்றும் இப்பிராந்தியத்தில் இறைச்சி, பால் என்பனவற்றுக்காக பெருமளவு கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. போதுமான வளமான மேய்ச்சல் நிலங்கள் இங்கு பரவியிருப்பதே இதற்கான காரணமாகும். இதுதவிர தானியங்களுக்கான பரந்தளவிலான விளை நிலங்களையும் இக்கண்டம் கொண்டுள்ளது.

எனினும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆப்பிரிக்காவின் பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் ஐரோப்பிய காலனியாதிக்கத்தின்

பொறிக்குள் சிக்கின. அவற்றின் பொருளாதார வளங்களும் திட்டமிட்டு சுரண்டப்பட்டன. பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி என்பவை ஆப்பிரிக்காவின் வளங்களைத் தத்தமது நலன்களுக்கேற்ப கூறு போட்டுக் கொள்வதில் விழுந்தடித்துக்கொண்டு களமிறங்கின. விளைவு, வளமிக்க ஆப்பிரிக்கத் தேசம் லாவகமாக உறிஞ்சப்பட்டு அந்நாடுகள் வறுமைக்குள் தள்ளப்பட்டன. இறுதியில் அது இருண்ட கண்டம் எனப் பெயர் வாங்கியது.

இது ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் தங்களின் சுரண்டல் கரங்களால் ஜனநாயக முகங்களில் பூசிய கரியே அன்றி வேறில்லை. இன்று என்ன நடக்கின்றது. ஆப்பிரிக்க ஒற்றுமையையும் அதன் தேச அடையாளங்களையும் ஏற்றுக் கொள்வதற்கு அமெரிக்க முதலாளிய அயோக்கியத்தனம் பின் நிற்கின்றது. 50 வருட காலத்திட்டத்தில் அக்கண்டத்தை கிறிஸ்தவ மயமாக்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துச் செல்கின்றது. சூடான், அல்ஜீரியா, டியூனீஸியா, மொராக்கோ, லிபியா என்பவற்றில் அமெரிக்கா தேவையற்ற முறையில் தலையிட்டு அந்நாடுகளின் அரசியல் பொருளாதார நிலைத்தன்மைக்கு ஊறு விளைவித்து வருகின்றது.

**4. தென்கிழக்கு ஆசியா** (South East Asia)

உலகில் முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழும் பிராந்தியங்களுள் தென்கிழக்காசியாவும் ஒன்று. இந்தோனேசியாவே உலகில் அதிக முஸ்லிம்களைக் கொண்ட நாடு. சுமார் 200 மில்லியன் முஸ்லிம்கள் இங்கு வாழ்கின்றனர்.[8] பெரியதும் சிறியதுமாக சுமார் 6000 தீவுகளை உள்ளடக்கிய இந்தோனேசியா உலகிலேயே செறிந்த கடல் வளம் கொண்ட பிராந்தியமாக விளங்குகின்றது. மீன்பிடித்தலுக்கு ஏதுவான களங்கள், துறைமுகங்கள் இப்பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ளன. பெரும் மனித வளங்களையும் பொருளாதார வளத்தையும் கொண்டிருக்கின்ற இப்பிராந்தியத்திலும் மேற்கத்திய சக்திகள் நீண்ட காலமாகவே தலையிட்டு வருகின்றன.

இந்தோனேசியாவின் ஆள்புல எல்லையைக் குறுக்கி அதனை சிறுசிறு தேசிய அரசுகளாக (State Nations) துண்டாடுவதன் மூலம் முஸ்லிம் பெரும்பான்மையைச் சிதறடிக்க அமெரிக்கா கடந்த 30 வருடங்களாக முயன்று வருகிறது. கிழக்கு திமோரை (East Timor) இந்தோனேசியாவிலிருந்து துண்டாடி பிராந்தியத்தில் ஒரு கிறிஸ்தவ நாட்டை உருவாக்குவதில் அமெரிக்காவும் பிற நாடுகளும் முனைப்புடன் களம் இறங்கியதை இந்தப் பின்னணியில் நின்று நோக்க

---

8. Source: The Muslim Council of Britain

முடியும். மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸின் மோரோ பிராந்தியம் என்பனவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதி களாகும். இவற்றின் பொருளாதார, அரசியல் நிலைத்தன்மையைச் சிதறடிப்பதில் அமெரிக்காவும் பிற நாடுகளும் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றன.

உண்மையில் மேற்குலகிற்கும் இஸ்லாமிய உலகத்திற்குமிடை யிலான மோதலின் பிராந்திய அரசியல், பொருளாதாரக் காரணிகளையே இதுவரை சுருக்கமாகப் பரிசீலித்தோம். அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஆட்சியாளர்கள் எவரேனும் இந்த உலகப்படத்தின் ஒழுங்கையும் முஸ்லிம்கள் வாழும் பிராந்தியங்களையும் மேலோட்டமாக அவதானித்தாலே அச்சமடைந்து வியந்து எச்சரிக்கை கொள்வர். அனைத்துப் பொருளாதார வளங்களையும் பிற காரணிகளையும் பொதிந்துள்ள, ஆதிக்கம் செலுத்துவதற்கான ஒரு பெரும் சக்தியாக இஸ்லாத்தைக் கருதுவர். இதனைக் கவனமாக எதிர்க்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வருவர். அரசியல் ரீதியாக இந்த மாபெரும் சக்தியை ஒன்றுக்கொன்று முரண்பட்ட சிறுசிறு நாடுகளாகவும் அரசுகளாகவும் உடைத்துத் துண்டாடுவது அவசியம் எனவும் கலாச் சார ரீதியாக தனது தனித்தன்மையை உணராத, புறக்கணித்து வாழும் சமூகமாக இஸ்லாமியச் சமூகத்தை ஆக்குவது தனது பொறுப்பு என்றும் உணர்வர். இதுவே இப்போது எரிந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய உலகில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மேற்சொன்ன உணர்வுக்கும் தீர்மானத்துக்கும் மேற்குலகு வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் வந்திருக்கிறது. சிலுவை யுத்தம், 19ஆம் நுற்றாண்டின் காலனித்துவம், அரசியல் அடக்கு முறை, சமகால ஆயுத ஆக்கிரமிப்பு, பயங்கர வாதத்திற்கெதிரான யுத்தம் அனைத்துமே மேற்கின் 'இஸ்லாமிய சக்தி' பற்றிய அச்சத்தின் விளைவுகளே. ஏனெனில் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே இஸ்லாம் தனது அரசியல் ஆதிக்கத்தை இழந்தது. 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறுகள் வரை இஸ்லாமே உலகில் மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தது. உஸ்மானியப் பேரரசின் கீழ் நாகரிகமும், அறிவியலும் பெரும் வளர்ச்சி கண்டன.

முஸ்லிம் உலகு பல நூற்றாண்டுகள் பொற்காலத்தில் மிளிர்ந்தது. ஐரோப்பா கிறிஸ்தவ மதச்சேற்றின் இருண்ட யுகத்தில் புதையுண்டு போயிருந்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டில் நிலைமை தலை கீழானது. மேற்குலகு இருட்டில் விழித்துக்கொள்ள இஸ்லாமிய உலகு வெளிச்சத்தில் உறங்கத் தொடங்கியது. எவ்வாறாயினும் வரலாறு வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை என்ற எழுதப்படாத விதி

மீண்டும் இயங்கத் தொடங்கியது. முஸ்லிம் சமூகம் பலவீனப்படலாம். நோய்வாய்ப்படலாம். ஆனால் அது முற்றாகவே இறந்து போய் விடுவதில்லை. தஜ்தீத் என்ற இரத்தம் அதன் நரம்பு நாளங்களில் பாய்ச்சப்பட்டு முஸ்லிம் உலகு இருபதாம் நூற்றாண்டின் முதற் கூறுகளில் மீண்டும் நித்திரை கலைத்து விழிப்படையத் தொடங்கியது. உலகின் நாலாபுறத்திலும் சென்ற நூற்றாண்டின் முதற்கூறுகளி லிருந்தே மாபெரும் இஸ்லாமிய எழுச்சி அலைகள் பரவலாகவும் வேகமாகவும் வீசத் தொடங்கின. இந்த எழுச்சி இன்னொரு முறை மேற்குலகுக்கு உஸ்மானியப் பேரரசை நினைவூட்டியது. இஸ்லாம் என்ற சக்தியின் வளர்ச்சி மேற்குலகின் தர்க்க ரீதியான வீழ்ச்சி என்பதை மேற்கத்திய சக்திகள் மீண்டும் உணரத் தலைப்பட்டன. 1980களுக்குப் பின்னர் வேகமாக வளர்ந்து வரும் இந்த இஸ்லாம் என்ற சக்தியை நசுக்குவதற்கான திட்டங்களில் மேற்குலகம் தனது கவனத்தைக் குவிக்கலானது.

இஸ்லாமிய எழுச்சியை முன்னெடுத்துச் சென்ற முஸ்லிம் உலகின் பல அரிய ஆளுமைகளைப் படுகொலை செய்யத் தொடங்கியது. இமாம் ஹஸனுல் பன்னா, செய்யது குத்ப், கலாநிதி ரபீஉ போன்ற வர்களை இல்லாதொழித்தது. அதற்காக பல இராணுவ, அரசியல் திட்டங்களை வகுக்க முனைந்தது. அவ்வாறு வளர்ந்து வரும் இஸ்லாமிய விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஒடுக்குவதற்கு அமெரிக்கா கவனமாக வரைந்த இராணுவ அரசியல் வேலைத் திட்டங்கள் மிகவும் பாரியதாகும். முஸ்லிம் உலகிற்கு எதிரான அமெரிக்காவின் இந்த ஒடுக்குமுறைத் திட்டம் சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே முனைப்புப் பெற்றமை கவனத்திற்குரியது. அடுத்து வரும் அத்தியாயத்தில் அதை நாம் ஓரளவு விலாவாரி யாகவே காண்போம்.

## பனிப்போரின் முடிவும் ஒரு துருவ உலகும்

*மேற்கல்லாத நாகரிகங்களை எதிர்த்துப் போராடு; வெற்றிகொள்; கட்டுப்படுத்து. இதுவே புதிய நூற்றாண்டை ஆள்வதற்கான அமெரிக்க அரசியல் மந்திரம்.* – சாமுவெல் பி.ஹன்டிங்டன் (அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்)

செப்டம்பர் 11 தான் சர்வதேச அரசியலைப் பாதித்த முக்கிய நிகழ்வு என்று பலரும் நம்புவது முற்றிலும் யதார்த்தங்களுக்குப் புறம்பானது. நீண்டகாலமாக இஸ்லாமிய உலகின் மீது தனது இராணுவ, அரசியல் ஆதிக்கத்தினை நிலைநிறுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அமெரிக்காவுக்கு ஓர் உடனடி வாய்ப்பையே அது திறந்து கொடுத்தது. ஆக, அனைத்து அரசியல் மாற்றங்களினதும் திருப்புமுனை செப்டம்பர் 11இல் நடந்த நிகழ்வன்று என்பதை நாம் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த முப்பதாண்டு கால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கையில், இந்த யதார்த்தம் இன்னும் தெளிவாகப் புலப்படும். 1970களுக்குப் பின்னர் அமெரிக்காவின் எதிராளியாகவும் மாபெரும் வல்லரசாகவும் விளங்கிய சோவியத் யூனியன் படிப்படியாகத் தளர்வடையத் தொடங்கியது. 1990களின் முற்கூறுகளில் அது முற்றாகவே உடைந்து சரிந்து வீழ்ந்தது. 1945இல் தொடங்கி 90கள் வரையான சுமார் அரை நூற்றாண்டு காலப்பகுதியில் உலகம் அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாக இருகூறுகளாகப் பிரிந்து நின்றது. மேற்கத்திய அரசியல் மொழி மரபில் இக்கூறுநிலையை இரு துருவ உலகம் (Bipolar World System) என்பர்.[9]

இரண்டாம் உலகப்போரின் பின் ரஷ்யாவின் தலைமையிலான கம்யூனிஸ நாடுகளுக்கும் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகளுக்குமிடையில் நிலவிய போட்டி, பொறாமை, பகைமை, அச்சம், அவநம்பிக்கை, சந்தேகம் என்பவற்றின் காரணமாகப் பெரும் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. இதுவே பனிப்போர்(Coldwar)[9அ] எனப்படுகின்றது. அதாவது இவ்விரு வல்லரசுகளும் தத்தமது முதலாளித்துவ, கம்யூனிஸ இலட்சியங்களை உலகின் பிற பகுதிகளில் பரப்புவதற்கு மேற்கொண்ட சூடான பிரச்சார முயற்சிகளே பனிப் போர் (Cold war) எனக் கருதப்படுகின்றது.[10]

---

9. Ali Reza Azgandi, The Meaning of Coldwar - Echo of Islam July - Aug 1993, P.30.

பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, போர்ச்சுக்கல் ஆகிய மேற்கு ஐரோப்பிய நாடுகள், சில இலத்தீன் அமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ், தேசிய சீனா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகள் உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி அமெரிக்கத் தலைமையில் ஒன்றிணைந்திருந்தன. போலந்து, ஹங்கேரி, செக்கஸ்லோவாகியா, யூகோஸ்லாவியா, அல்பேனியா, ருமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கம்யூனிஸத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சோவியத் யூனியனின் தலைமையின்கீழ் ஒன்றுபட்டிருந்தன. பனிப்போர் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தளங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தத்தமது கூட்டில் ஏனைய நாடுகளை இணைத்துக் கொள்ள அந்நாடுகளுக்கு பண, படை, ஆயுத உதவிகளை வழங்கியும் உள்நாட்டுப் பூசல்களை தமக்குச் சார்பாக ஊக்குவித்தும் வந்தன. இதனால் இரு அணிகளுக்குமிடையிலான நெருக்கடிகளும், மோதல் நிலையும் மேலும் கூர்மையடைந்தன.

இவ்விரு அணிகளுக்கிடையிலும் கொள்கை ரீதியில் காணப்பட்ட வேறுபாடு, இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து ஐரோப்பாவில் நிலவிய புதிய சக்திச் சமநிலை (Balance of Power) உலகின் மீதான ஆதிக்கப் போட்டி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ரஷ்யா கம்யூனிஸ மயமாக்கியமை, அமெரிக்கா தனது உற்பத்திப் பொருட்களுக்கு உலகளவில் சந்தை வாய்ப்பினைத் தேடியமை என்பவையே ரஷ்யாவும் அமெரிக்காவும் இவ்வாறு எதிரெதிர் முகாம்களை உருவாக்கி உலக நாடுகளை இருதுருவங்களாகத் துண்டாடிவிடக் காரணங்களாயின.

பனிப்போர் ஏற்படுத்திய மிக மோசமான விளைவுகளில் ஒன்றே அவற்றிடையே உருவான இராணுவக் கூட்டமைப்பு எனலாம். அமெரிக்கத் தலைமையில் நேட்டோவும் (North Atlantic Treaty Organisation) ரஷ்யத் தலைமையில் வார்ஸாவும் நிறுவப்பட்டன. இதுதவிர Seato - South East Asian Treaty Organisation, Seanto, Anzus போன்ற இராணுவக் கூட்டுக்களும் உருவாக்கப்பட்டன. இதன்படி ஒப்பந்த நாடுகள் ஏதாவது ஒன்றின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்

---

9அ. 'பனிப்போர்' என்ற சொல்லை முதன்முறையாகப் பயன்படுத்தியவர் Walter Lippmann என்னும் அமெரிக்க ஆய்வாளர். அவர் Herald Tribune என்ற நியூயார்க் பத்திரிகையொன்றில் எழுதிய கட்டுரைத் தொடரொன்றிலே இதனைக் கையாண்டார். பின்னர் அக்கட்டுரை The Coldwar என்ற பெயரில் ஒரு நூலாகவும் வெளிவந்தது. 1947இல் The Foreign Affairs இதழில் George Canon என்பவர் இந்நூலுக்கு ஒரு விமர்சனம் எழுதியிருந்தார். பார்க்க: The Meaning of Coldwar

*10. மேலது பக்.31*

அனைத்து உறுப்பு நாடுகள் மீதும் தொடுக்கப்படும் தாக்குதலாகக் கருதப்பட்டு அதற்கெதிராக அனைத்து ஒப்பந்த நாடுகளும் போர் தொடுக்கும் என்று உடன்பாடு காணப்பட்டிருந்தது. இத்தகைய இராணுவக் கூட்டினால் எந்த நிமிடத்திலும் போர் வெடிக்கலாம் என்ற அச்சம் நிலவியது. அணுவாயுதங்களைப் போட்டி போட்டுக் கொண்டு இவ்விரு வல்லரசுகளும் உற்பத்தி செய்து குவித்தன. விளைவாக போர் ஒன்று மூளுமானால் அது ஒட்டுமொத்த மனித சமூகத்தையே முற்றாக அழித்துவிடும் என்று அஞ்சப்பட்டது. போர்க்களத்தில் பனிப்போர் நடைபெறாவிட்டாலும் பொருளியல், அரசியல், அறிவியல், பிரச்சார முனைகளில் தீவிரமாக அது நடைபெறலாயிற்று.

பிரச்சார முனையில் பரஸ்பரம் வசைமொழியால் தாக்கியும் பொருளியல் முனையில் வேண்டியவர்களுக்கு விழுந்தடித்துக் கொண்டு பொருளாதார உதவி வழங்கியும் அறிவியல் முனையில் அணுவாயுதங்களை அபரிமிதமாக உற்பத்தி செய்தும் பனிப்போர் மிக உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. சில நாடுகளில் மறை முகமான ஆயுதப் போர் கூட நிகழ்ந்தது. தனது அணியிலுள்ள சிறு நாடுகளை இவ்விரு வல்லரசுகளும் பரஸ்பரம் ஏவிவிட்டு அவற்றின் பின்னணியில் இருந்துகொண்டே பலப் பரீட்சையில் ஈடுபட்டன. சீன உள்நாட்டுப்போர், வியட்நாம் போர், ஜெர்மனி சிக்கல் என்பவை இதற்குப் பொருத்தமான உதாரணங்களாகும். ஆனால் 1970களுக்குப் பின்னர் பனிப்போரின் உக்கிரம் குறிப்பிடத்தக்களவு தணியத் தொடங்கியது. 1990களின் முற்கூறுகளில் பனிப்போர் முற்றாகவே தளர்ந்து இருதுருவ உலக நிலை முடிவுக்கு வந்தது.

1991இல் சர்வதேச அரசியல் வரலாற்றிலேயே மிக ஆச்சரிய மானதும் திருப்புமுனை மிக்கதுமானதொரு நிகழ்ச்சி நடைபெற்று முடிந்தது. அதுதான் பிரமாண்டமாக எழுந்து நின்ற சோவியத் யூனியன் என்ற வல்லரசின் மாபெரும் வீழ்ச்சியாகும். 1922இல் சோவியத் யூனியனில் இணைந்த 14 பிற குடியரசுகள் (உக்ரைன், பைலோ ரஷ்யா, உஸ்பெகிஸ்தான், கஸகிஸ்தான், ஜார்ஜியா, அஸர்பைஜான், லிதுவேனியா, மால்டாவியா, லாத்வியா, கிர்கிஸ்தான், தாஜிகிஸ்தான், ஆர்மேனியா, துர்க்மேனிஸ்தான், எஸ்தோனியா) பிரிந்து தனித்தனி தேசிய அரசுகளாக மாறின. இப்பிளவும் உடைவு நிலையும் சோவியத் யூனியனின் பொருளாதார, இராணுவ, அரசியல் நிலைத்தன்மையையும் வல்லரசுப்பலத்தையும் பெருமளவு பாதித்தது. காரணம் ஆயுத உற்பத்தியிலும் மூலப் பொருளிலும் ஆர்மேனியா, உக்ரைன், ஜார்ஜியா போன்ற பிராந்தியங்களிலேயே சோவியத்

யூனியன் பெருமளவு தங்கி இருந்தது. பொருளாதாரத்துறை முன்னேற்றத்தில் உஸ்பெகிஸ்தான், கஸகிஸ்தான், தாஜிகிஸ்தான் என்பவை முக்கிய இடம் வகித்தன. அவற்றின் பிளவுடன் ரஷ்யா பெருமளவு பொருளாதார, இராணுவப் பின்னடைவை எதிர் கொள்ளலானது. இறுதியில் அது ரஷ்யாவின் வீழ்ச்சியில் போய் முடிவடைந்தது.

சோவியத் யூனியனின் இந்த உடைவு சர்வதேச அரசியல் அரங்கில் ஒரு பெருத்த அதிகார இடைவெளியை (Power gap) உருவாக்கி விட்டது. இதுவரை இரு துருவங்களாகப் பிரிந்து நின்ற உலகம் சோவியத் யூனியனின் சரிவைத் தொடர்ந்து ஒரு துருவ உலகமாக (Unipolar world) மாறியது. இப்போது அமெரிக்காவே இந்த ஒற்றைத் துருவ உலகத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்று ஒரு தனிக்காட்டு ராஜாவாகத் தன்னை தகவமைத்துக் கொள்ளலானது. 1991இல் அமெரிக்க அரசியல் ஆய்வாளர் பிரான்ஸிஸ் புகயாமா என்பவர் The end of history for destiny of man என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில்,

> ''வரலாறு சுவாரஸ்யமாகவும் தொடர்ச்சியாகவும் இயங்க வேண்டுமாயின் எதிர் நிலைச் சக்திகளின் மோதல் மிக இன்றியமையாதது. ஆனால் இப்போது உலகம் ஒரு துருவமாக மாறியுள்ளதால் அதாவது அமெரிக்க வல்லரசுக்கு எதிர்சக்தி இல்லாததால் வரலாற்றின் இயக்கம் ஸ்தம்பித்துவிட்டது. ஆகவே வரலாறு தனது பயணத்தை முடித்துவிட்டது''

என்று குறிப்பிட்டிருந்தார்.[11]

புகயாமாவின் இந்தக் கருத்தை சாமுவெல் பி. ஹன்டிங்டன் ஒப்புக்கொள்ளவில்லை. (ஹன்டிங்டன் இனத்தால் யூதர். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள போர்முறை மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான ஆய்வுத்துறையின்–Strategical Studies and International Affairs – ஆய்வாளர்) நியூயார்க்கில் இருந்து வெளிவரும் Foreign Affairs என்ற சஞ்சிகையில் இவர் தொடராக எழுதிவந்த நாகரிகங்களின் மோதலும் உலக ஒழுங்கை மீளமைத்தலும் (Clash of Civilizations and Remaking the World order) என்ற கட்டுரையில் பிரான்ஸிஸ் புகயாமாவின் கருத்தினை முற்றாக மறுத்துரைத்தார்.

அக்கட்டுரையில் சோவியத் யூனியனின் உடைவைத் தொடர்ந்து ஒரு புதிய ஒழுங்கு உருவாகப் போகின்றது எனவும் அது உலகில் ஆதிக்கம் செலுத்தும் நாகரிகங்களுக்கிடையிலான மோதலாக வெடிக்கும் (After the end of coldwar world will witness a most serious clash

11. The Impact International, May Issue 1995, P.36

among civilizaions dominate the world) எனவும் இந்த நாகரிகங்களின் மோதல்(Clash of Civilizations) தவிர்க்க முடியாதது எனவும் கூறியிருந்தார். அவரது கருத்தில் இந்தப் புதிய வகை மோதல் இஸ்லாத்திற்கும் மேற்குலகிற்கும் இடையிலானது.

90களுக்குப் பிந்திய அமெரிக்க ஆதிக்க பத்தாண்டுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதமே அமெரிக்க வல்லரசு எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலாக இருக்கும் எனவும் இந்த அறைகூவலைச் சமாளிக்க அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளுக்கிடையே நிலவும் பிளவுகளை நன்கு பயன்படுத்தி தனது இராணுவ, அரசியல் ஆதிக்கத்தை அவற்றின் மீது திணிக்க வேண்டும் எனவும் அமெரிக்காவுக்கு அறிவுரை பகர்ந்தார்.[12]

மேற்கல்லாத - மேற்கைச் சாராத நாகரிகங்களை எதிர்த்துப் போராடு; வெற்றிகொள்; கட்டுப்படுத்து (Confront; Conquest; Control non - Western Civilisation). இதுவே புதிய நூற்றாண்டை ஆள்வதற்கான அமெரிக்க அரசியல் மந்திரம் என்று யூத ஆய்வாளரான ஹன்டிங்டன் வலியுறுத்தி வந்தார். அவரது அரசியல் பத்தியில் முஸ்லிம்களும் இஸ்லாமும் அமெரிக்காவின் எதிரிகளாக நிறுத்தப்பட்டனர். இந்தக் கருத்துநிலை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்தே நவ உலகு ஒழுங்கு (New World Order) உலகமயமாதல்(Globalization) போன்ற சொல்லாடல்கள் மேற்கத்திய புலமைத்துவ வட்டாரங்களில் மிகுந்த கவனயீர்ப்பைப் பெற்றன.

ஒருபுறம் சோவியத் யூனியனின் உடைவைத் தொடர்ந்து அமெரிக்க ஆதிக்கம் மேலெழத்தொடங்கிய அதே வேளை உலக ஒழுங்கில் பல புதிய மாற்றங்களும் துரிதமாக நிகழத் தொடங்கின. பொருளாதாரத் துறையில் பாரிய மாற்றங்கள் நடந்தன. ஊடகத்துறை மற்றும் தொலைத்தொடர்பு ஊடகச் சாதனங்களின் பிரமாண்டமான வளர்ச்சியினால் சர்வதேச சமூகம் ஒரு கிராமமாகச் சுருங்கியது. பெரும்பாலான நாடுகள் விரும்பியோ விரும்பாமலோ முதலாளித்துவ பொருளாதார அமைப்பை நோக்கி வேகமாக நகரத் தொடங்கின.

இந்த மாறும் சூழ்நிலையில் அமெரிக்கா தனது இராணுவத் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி முழு உலகையும் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர பெரும் முயற்சிகளை மேற்கொள்ளலானது. குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் தனது இராணுவ ஆதிக்கத்தைத் திணித்து அவற்றின் பண்பாட்டு, நாகரிகத்

---

12. Shukri M.A.M. *Globalization and Muslim Community* A keynote Address delivered in Naleemia

தனித்தன்மைகளை இல்லாதொழிக்க திட்டங்களை வரையலானது. இவ்வகையில் உலக மயமாதல் அல்லது சர்வதேச ஒழுங்கு என்ற அமெரிக்கத் தந்திரங்கள் முஸ்லிம் நாடுகளையே அடிப்படை இலக்காகக் கொண்டவை என்பதை நாம் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன அரசியல் தந்திரங்கள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்காத சூழ்நிலையில் அமெரிக்கா மீண்டும் புதிய திட்டங்களை வகுப்பதற்கு முயன்றது. கைத்தொழில்துறை வளர்ச்சி, பரவலான ஆயுத உற்பத்தி, தொடர்புசாதனத்துறை, உளவு ஸ்தாபனங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவை அமெரிக்காவுக்கு தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்குப் பெரிதும் துணை நின்றன. இறுதியாக அடுத்துவரும் நூற்றாண்டையும் அமெரிக்காவே ஆள வேண்டும் என்ற வகையில் ஒரு புதிய இராணுவத் திட்டம் வரையப்பட்டது. இனிவரும் பகுதியில் அதனைப் பரிசீலிப்போம்.

## புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்

*உலகில் கேந்திர மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியங்களில் அமெரிக்கப் படையணிகளை நிலையாக நிறுத்தி வைப்பதன் மூலம் தனது பொருளாதார, அரசியல் நலன்களை எளிதில் அடைந்து கொள்ள வாஷிங்டன் முயல்கிறது. இவ்வகை தந்திரம் அமெரிக்காவுக்கு ஒன்றும் புதிதல்ல. எனினும் இது முஸ்லிம் உலகின் மீது முனைப்பான கவனக் குவிப்புச் செய்வதே இதில் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய விடயம்.*

*– கலாநிதி பத்ஹி உஸ்மானி*
*(எகிப்திய வரலாற்றுத்துறை ஆய்வாளர்)*

*1980களுக்குப் பின்னர் ஏற்பட்ட பனிப்போரின் தளர்வைத் தொடர்ந்து அமெரிக்கா பிற நாடுகளின் மீது தனது இராணுவ ஆதிக்கத்தினை நிலைநிறுத்தத் தேவையான திட்டங்களில் கவனத்தைக் குவிக்கலானது. இந்தப் பின்னணியிலேயே செப்டம்பர் 11தான் சர்வதேச அரசியலைப் பாதித்த முழுமுதல் காரணியம் என்று கருதுவது முற்றிலும் தவறானது என்று முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டோம். இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின் ரீகனுக்குப் பிந்திய பத்தாண்டுகளிலேயே(Post Regon Era) அமெரிக்க இராணுவத் திட்டங்கள் வரையப்பட்டு முஸ்லிம் உலகை மேற்கின் குறிப்பாக அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயிற்று. இந்த முயற்சிகளில் முக்கியமானதும் முதன்மையானதுமே புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம் எனலாம். ஐக்கிய அமெரிக்காவின் இராணுவப் படையணிகளை வளமான நாடுகளில் நிலைநிறுத்துவதற்கானதொரு பாரிய முயற்சியே இது.*

*1997ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை இத்திட்டம் மிக இரகசிய மாகவே பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் அதிர்ஷ்ட வசமாக இத்திட்டத்தில் உள்ளடங்கி இருந்த இரகசியங்கள் 2000ஆம் ஆண்டில் அம்பலத்திற்கு வந்தன. சமகால அமெரிக்காவின் தொழில்துறை வளர்ச்சி விரும்பியோ விரும்பாமலோ மத்திய கிழக்கின் பெட்ரோ லியத்தின் மீதே பெருமளவு தங்கியிருக்கிறது. அமெரிக்காவில் பெறப்படும் எண்ணெய் வளம் அதனுடைய தேவையின் 20 சத வீதத்தையே பூர்த்தி செய்யப் போதுமானது. இதனால் மத்திய கிழக்கு*

முஸ்லிம் நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதும் அங்குள்ள நாடுகளுக்கிடையே நிலவும் பிளவுகளை நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதும் ஆட்சி பீடங்களில் தனது அரசியல் முடிவுகளுக்குத் தலையாட்டுகின்ற பொம்மைகளைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் அமெரிக்காவைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும்.

இக்கருத்து 80களைத் தொடர்ந்தே அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகளிடம் வலுப்பெறலானது. இந்நோக்கத்தை எட்ட வரையப் பட்ட திட்டமே புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான வரைவு (The Project for New American Century-PNAC) எனலாம். மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவத்தை அடர்த்தியாக நிலைநிறுத்தி அங்கெல்லாம் தனக்குச் சார்பான பொம்மை அரசுகளை ஏற்படுத்துவதும் அதனூடாக குறைந்த விலையில் பெட்ரோலியத்தைச் சுரண்டுவதும் வளர்ந்து வரும் இஸ்லாமிய எழுச்சியை முளையில் கிள்ளியெறிவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

இத்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்காவின் வரவு - செலவுத் திட்டத்தில் 45 சதவீதம் இராணுவத்துறைச் செலவினங்களுக்காக ஒதுக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.[13] 1985களில் முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷின் பதவிக் காலத்திலேயே இத் திட்டம் வரையப்பட்டது. முஸ்லிம் உலகிற்கெதிரான இந்த இராணுவத் திட்டத்தை வரைந்ததில் மெக்டொனால்ட் ரம்ஸ்பெல்ட் (இனத்தால் யூதர்), ரிச்சட் பேன்ஸ், கொன்டலீஸா, போல்லொஸ்ட் போவீட்ஸ், பால் வோல் போவிட்ஸ் போன்றவர்கள் பிரதானமானவர்கள்.[14]

அப்போதிருந்தே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தக்க தருணத்தை அமெரிக்க பென்டகன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அதாவது தென்மேற்கு ஆசியாவில் தனது இராணுவத்தை நிலை நிறுத்த ஏதாவது நியாயம் வாஷிங்டனுக்குத் தேவைப்பட்டது. சர்வ தேச சமூகங்களின் காதுகளில் பூவைச் செருகி சர்வதேச சட்டங்களை யெல்லாம் மீறி இதனைச் செய்வதற்கு வெளிப்படையான சாக்கு களை பென்டகன் இராணுவக் கழுகு மையம் எதிர்பார்த்துக் காத்திருந்தது. இந்தக் காத்திருப்பு நிலையில்தான் சதாம் குவைத் மீது படையெடுத்தார். இதனைக் காரணம் காட்டி அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது மூக்கை நுழைப்பதற்கான முதல் சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் பெற்றது.

---

13. Invation and Honourable Deception - Impact International/ Vol.33, Issue 6+7, Jun-July 2003, P.24

குவைத்தை சதாமின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பை தான் சுமந்து கொண்டுள்ளதாகக் கூறி வாஷிங்டன் சுமார் 1 லட்சத்திற்கும் அதிகமான படையணிகளை குவைத் மற்றும் அதனைச் சூழவுள்ள ஸவுதி அரேபியா, கட்டார், பஹ்ரைன் போன்ற நாடுகளில் நிலை நிறுத்தியது. ஆனால் அதிர்ஷ்டவசமாக சதாம் தனது படையணியை உடனடியாகப் பின்வாங்கிக் கொண்டதனால் அமெரிக்கப் படையணிகளும் பிராந்தியத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை வந்தது. (அப்போது அமெரிக்கப் படை முற்றாகவே வெளியேறவில்லை. பல்லாயிரக்கணக்கான படைவீரர்கள் தொடர்ந்தும் இந்நாடுகளில் நிலைகொண்டனர். இன்றுவரை அவர்களுள் கணிசமானவர்கள் இந்நாடுகளில் தங்கியுள்ளனர்.) இதனால் அமெரிக்காவின் இராணுவத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை.

புஷ்ஷைத் தொடர்ந்து கிளின்டன் பதவியேற்றபோது பி.என்.ஏ.சி. (PNAC) ஒரு தற்காலிகப் பின்னடைவை எதிர்கொண்டது. காரணம் எதிர்கால ஊகங்களின் அடிப்படையிலான இக்கொள்கையை (Doctrine of Preemption) முழுமையாக கிளின்டன் ஒப்புக்கொள்ள வில்லை. எனினும் பாரம்பரியப் புத்திஜீவிகள் தமது கருத்து நிலையைப் பலப்படுத்திக்கொள்ள கிளின்டனின் பதவிக் காலத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.[15] பில் கிளின்டன் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறியபோது அமெரிக்க ஆதிக்கத் திட்டத்தின் பிரதிநிதிகள் தமது செயல்திட்டத்தில் தீவிர முனைப்புக் காட்டத் தொடங்கினர்.

1997இல் இத்திட்டம் வெளியாகி 6 மாதங்கள் கழிந்த நிலையில் இத்திட்டத்தின் பிரதான வரைஞர்கள் அதிகாரத்திலிருந்து சதாமை பதவி கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக இறங்குமாறு கிளின்டனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தனர். அக்கடிதத்தில் மெக்டொனால்ட் ரம்ஸ்பெல்ட்(Mecdonald Rumsfelt), பால் வோல் போவிட்ஸ்(Paul Wolfowitz), ஜான் போல்டல்(John Boltol), எல்லியட் (Elliott), அப்ரம்ஸ்(Abrams), ரிச்சர்ட் ஆர்மிடெஜ்(Richard Armitage) போன்றோர் ஒப்பமிட்டிருந்தனர். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் செயலூக்கத்தில் பால் வோல் போவிட்ஸின் பங்கு பிரதானமானது. ''ஜெருஸலத்திற்கான பாதை பக்தாதை ஊடறுத்துச் செல்கின்றது'' என்பதே வோல் போவிட்சின் மூலதந்திரம். அதாவது இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அதன் ஆக்கிரமிப்பு

14,15. Muzaffer Iqbal; From ground zero to Baghdad against the flow of history - Impact International, Vol.33, Issue 09, Sep. 2003, P.11-13

நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்குமான ஒரே வழி முதலில் பக்தாதைக் கைப்பற்றுவதே என்பது அவரது வாதம்.

அமெரிக்க ஆதிக்கத்திற்கான இப்புதிய திட்டம் அமெரிக்காவின் புதிய இராணுவ மறுசீரமைப்பையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது இத்திட்டம் வெளியானதன் பின்னர் அமெரிக்க ஊடகங்களால் புனையப்பட்ட பொய்ப் பிரச்சாரமே. அதன் உண்மையான உள்நோக்கம் அமெரிக்க பாதுகாப்பை பலமாகக் கட்டியெழுப்புவதும் அடுத்த நூற்றாண்டிலும் உலகில் அமெரிக்க ஆதிக்கத்தைத் தக்க வைப்பதுமே.[16] இதன் மூலம் அமெரிக்கா தனது ஆதிக்க எல்லையை விஸ்தரித்து முஸ்லிம் உலகை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முயல்கிறது.

உலகில் கேந்திர மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியங்களில் அமெரிக்கப் படையணிகளை நிலையாக நிறுத்தி வைப்பதன் மூலம் தனது பொருளாதார, அரசியல் நலன்களை இலகுவாக அடைந்து கொள்வதே இத்திட்டத்தின் முழுமுதல் நோக்கம் எனலாம். இந்த வகைத் தந்திரம் அமெரிக்காவுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனாலும் இது முஸ்லிம் உலகு மீது முனைப்பான கவனக்குவிப்புச் செய்வதே இதில் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய விடயம் எனலாம். இத்திட்டம் எதிர்காலத்தில் இதைவிட விரிந்த குறிக்கோளையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் இந்த இராணுவ நிலைநிறுத்தலும், விஸ்தரிப்பும் நிகழ்காலத்தில் மட்டுமின்றி எதிர்காலத்திலும் பலதரப்பு யுத்தங்களை சமாளிக்கும் வகையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

கிளின்டனைத் தொடர்ந்து புஷ் பதவியேற்றதும் பி.என்.ஏ.சி. (PNAC) தீவிரமாக செயலுக்கு வந்தது. இத்திட்டத்தினை மிகுந்த முனைப்புடன் செயலுக்குக் கொண்டுவர வாஷிங்டன் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலானது. விமான ஏவுகணைக்கு எதிரான ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டமை, புதிய இராணுவத் தளவாட உற்பத்தியில் கவனம் செலுத்தியமை, பாதுகாப்புத்துறை செலவினங்களை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் 45 வீதமாக உயர்த்தியமை, அணு ஆயுத ஏவுகணை உற்பத்தியில் அதிக தொகையைச் செலவிட்டமை முதலியவை இத்திட்டத்தின் பாற்பட்டவையே.

---

16. America's Role in the world - A cover story, The Economist, June 29-July 05, 2002, P.54

மெக்டொனால்ட் ரம்ஸ்பெல்ட், டிக்ஷெனி போன்றவர்களின் தொடர்ச்சியான அழுத்தங்களும் இதை நடைமுறைப்படுத்தப் பெரும் செயலூக்கியாக அமைந்தன. மீண்டும் ஒருமுறை மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வாஷிங்டன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. பி.என்.ஏ.சி.யில் அமெரிக்கத் தாக்குதல் பட்டியலில் இடம்பெற்ற முதல் நாடு ஈராக் என்பதும் கவனிக்கத்தக்கது. புஷ் ஆட்சிக்கு வந்தவுடனேயே ஈராக்கை இராணுவ ரீதியில் குறிவைக்கும் முயற்சியில் அமெரிக்க நிர்வாகத்தின் செல்வாக்குமிக்க சியோனிஸ சக்திகள் முனைப்புக் காட்டத் தொடங்கின. எனினும் ஈராக்கைத் தாக்குவதற்கான வெளிப்படையான நியாயம் எதுவும் அப்போது வாஷிங்டனுக்கு இருக்கவில்லை.

இத்தகைய சூழ்நிலையிலேயே செப்டம்பர் 11இல் உலகையே உலுக்கிய அந்த நிகழ்வு இடம்பெற்றது. வேறு வார்த்தையில் கூறுவதாயின் அமெரிக்காவுக்கு இந்த நிகழ்வு இன்னொரு பியர்ல் துறைமுகத் தாக்குதல்(Pearl harbour Attack) ஆகிவிட்டது. துரதிர்ஷ்டவசமாக முழு இஸ்லாமிய உலகை நோக்கியும் அமெரிக்கா படை எடுப்பதற்கு அந்நிகழ்வு பெரும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

எனவேதான் 2001 செப்டம்பர் 11இல் உலக வர்த்தக மையம் அமெரிக்க இராணுவத் தலைமையகம் போன்றவை விமானத் தாக்குதல்களுக்கு இலக்காகி ஒருசில மணி நேரங்களில் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ரம்ஸ்பெல்ட் ஈராக் மீதான இராணுவப் படையெடுப்பை உடனடியாக மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி புஷ்ஷைக் கோரி இருந்தார். அவர் புஷ்ஷுடனான தனது தொலைபேசி உரையாடலின் போது ''அமெரிக்கர்களைப் பொறுத்தவரை இத்தாக்குதல் மற்றொரு பியர்ல் துறைமுகத் தாக்குதல் (Pearl harbour Attack)'' என்று கூறினார். மறுநாள் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

> ''பயங்கரவாதத்திற்கு எதிரான முதல் சுற்று யுத்தத்தில் ஈராக் அமெரிக்காவின் முதலாவது இலக்காக இருக்க வேண்டும்''

என்றும் வலியுறுத்தினார்.[17]

இவ்வாறு 15 வருடங்களுக்கு முன்னரே வகுத்து வைத்த ஒரு இராணுவத் திட்டத்தை செயலுக்குக் கொண்டுவர அமெரிக்கா பல்வேறு குற்றச்சாட்டுக்களை முஸ்லிம் நாடுகள் மீது சுமத்தி வந்தது. அவற்றைத் தன்வசமுள்ள ஊடகங்களின் பிரச்சார ஆயுதத்தின் மூலம்

---

17. Johnson Charmess - The Sorrws of Empire; How the Americans Lost their Country - Quated Article Published in Daily Mirror March 2004.

சர்வதேச சமூகங்களின் காதுகளில் மீண்டும் மீண்டும் ஊதிப் பெருக்கி உண்மை என்று நம்ப வைத்தது. அதற்கு வலிமை சேர்க்கும் வகையில் தனது தொழில்நுட்பத்தால் கட்டியெழுப்பியுள்ள உளவு நிறுவனங்களிடமிருந்து தமக்குச் சார்பான அறிக்கைகளைப் புனைந்து பாதுகாப்புச் சபைக்கு ஒப்புவித்து வந்தது. இறுதியில் அனைத்து சர்வதேச சட்டங்களையும் மீறி ஈராக் மீது போர் தொடுத்து பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்றுகுவித்தது. இலட்சக் கணக்கான படைவீரர்களை அப்பிராந்தியத்தில் குவித்து வைத்துள்ள அமெரிக்கா இப்போது சிரியா, ஈரான், லிபியா, சூடான் என்பவற்றுக்கெதிராகவும் ஈராக் பாணியிலான குற்றச்சாட்டுக்களைக் கட்டமைத்து வருகின்றது.

உண்மையில் இப்போது நிகழ்ந்து கொண்டிருப்பதெல்லாம் அமெரிக்க நிர்வாகத்தின் அதிரடி நடவடிக்கைகளன்று. வளமுள்ள பிராந்தியங்களைச் சுரண்டி ஏப்பமிட அமெரிக்கா காலாகாலமாக நடித்துவரும் நாடகங்களில் ஒரு காட்சியே இப்போது உலக அரங்கில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நாடகத்தின் கதையும் முடிவும் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டுவிட்டன.

21ஆம் நூற்றாண்டையும் அமெரிக்காவே ஆள வேண்டும் என்ற வக்கிரப் புத்தியோடும் தாம் ஆளப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவத்தோடும் அமெரிக்கத் தலைவர்கள் இச்சோக நாடகத்தின் கதாநாயகர்களாக நடித்து வருகின்றனர். ஒடுக்குமுறையும், சுரண்டலும், துயரமும் நிறைந்த இந்தக் நாடகத்தின் பெயர்தான் 'புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்' எனலாம். அமெரிக்காவின் நீண்டகால அரசியல் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கையில் ஆக்கிரமிப்பு நாடகங்களின் கதாபாத்திரங்கள் மட்டுமே மாறி வந்திருக்கிறார்கள் என்பதையும் கதையும் கருவும் எப்போதும் ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றன என்பதையும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

# நவீன இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்

இஸ்லாமிய சமூக மாற்றம் என்பது ஒரு படிமுறையான செயற்கிரமம். அது முஸ்லிம் சமூகத்தின் உள்ளே இருந்து தொடங்க வேண்டியதொன்று. அது முற்றிலும் மக்களின் விருப்புத் தேர்விலும் பங்குபற்றலிலும் தங்கியிருக்கிறது. இஸ்லாமிய சமூக மாற்றம் என்பது கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்ப சக்திகளின் வளர்ச்சி, நெறிப்படுத்தப்பட்ட அரசியல் போராட்டம் இவற்றினூடாகவே சாத்தியப்பட முடியும்.

நவீன இஸ்லாமிய எழுச்சி என்பது 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறுகளிலிருந்தே தொடங்கிவிட்டது எனலாம். முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப், இமாம் ஷவ்கானி, இமாம் ஆலூசி, இந்தியாவின் ஷாஹ் வலியுல்லாஹ் அத்திஹ்லவி, இர்பான் அஷ்ஷஹீத் போன்றோருடன் தொடங்கி ஷகீப் அர்ஸலான், ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மது அப்துஹு, ரஷீத் ரிழா, அல்லாமா இக்பால் என்போரின் ஊடாக வந்து, லிபியாவின் ஸனூஸியா இயக்கம், வட ஆப்பிரிக்காவின் மஹ்தி இயக்கம் போன்ற விடுதலைப் போராட்டங்களாக வளர்ந்து, அல் இஹ்வானுல் முஸ்லிமூன், ஜமாஅத்தே இஸ்லாமி, துருக்கியின் ரபாஹ் இயக்கம் என்பவற்றில் வந்து நிற்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்த எழுச்சியும் புத்துணர்வும் வெறும் உணர்ச்சி நிலைகளல்ல. இஸ்லாம் பற்றிய புரிதல், அதைப் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வு என்பவற்றைத் தாண்டி இஸ்லாம் ஒரு அரசியல் சக்தியாகவும் வளர்ந்து வருகின்றது. 1970களில் ஈரானியப் புரட்சியைத் தொடர்ந்து அங்கே அது ஆட்சி அமைத்தது. சூடானில் இஸ்லாமியவாதிகளின் கைகளுக்கு ஆட்சி மாறியது. துருக்கியில் கடந்த 80 வருடங்களுக்குப் பின்னர் இஸ்லாம் ஆட்சிபீடமேற முனைந்து வருகின்றது.[18]

பொதுவாக ஊழலும், மோசடியும் அரசியல் வன்முறைகளுமின்றி சுதந்திரமான தேர்தல்கள் நடைபெற்ற நாடுகளில் இஸ்லாமிய இயக்கங்களும், கட்சிகளும் ஆட்சியில் அமர முடிந்தது. வட ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா, டியுனீஸியா, மொரோக்கோ போன்ற

---

18. மன்சூர் எம்.ஏ.எம். இஸ்லாமியத்தை அடையாளம் காண்போம். 2001 நவம்பர் மீள்பார்வை கட்டுரை.

நாடுகளிலும் இஸ்லாமிய இயக்கங்கள் பெருமளவு அரசியல் வெற்றிகளைப் பெற்றன. ஏறத்தாழ எல்லா அரபு நாடுகளிலும் பலமான எதிர்க்கட்சிகளாக இஸ்லாமிய இயக்கங்கள் மாறியுள்ளன. எகிப்தில் இஃவான்களின் கட்சி 17 இடங்களை வென்றது. அந்நாட்டின் ஏனைய அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து பெற்ற இடங்களைவிட இது அதிகமானது. ஹொஸ்னி முபாரக்கின் தேர்தல் மோசடிகள், ஊழல்கள், வன்முறைகள் என்பவற்றுக்கு மத்தியில்தான் இந்தப் பாரிய வெற்றியை அவர்கள் அடைந்தார்கள். இதுவொரு பெரிய சாதனை. இன்று எகிப்தில் ஆட்சி இயந்திரத்தின் அநியாயங்களையும் அரசியல் திருகு தாளங்களையும் தட்டிக் கேட்கும் வலிமையை அவர்கள் பெற்றுள்ளனர். நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கான மாற்றுத் திட்டங்களையும் ஜனநாயகபூர்வமான அரசியலமைப்பு சீர்திருத்தங்களையும் அவர்கள் முன்வைத்து வருகின்றனர்.

ஜோர்டானில் ஜம்இய்யதுல் அமலில் இஸ்லாமி என்ற அரசியல் கட்சியும், யெமனில் தஜம்முஉல் யெமனில் இஸ்லாஹி என்ற கட்சியும், அல்ஜீரியாவில் முஜ்தமஉ அஸ்ஸில்மியும் குவைத்தில் ஹிஜப் துஸ்தூர் போன்ற இஸ்லாமியக் கட்சிகள் பலம்வாய்ந்த எதிர்க்கட்சிகளாக உருவெடுத்து வருகின்றன. ஜனநாயக விழுமியங் களைக் குறைந்தபட்சமேனும் மதிக்காத, சர்வாதிகாரப் போக்குள்ள சிரியா, டியுனீஸியா போன்றவற்றில் கூட இஸ்லாமிய இயக்கங்கள் சக்திவாய்ந்த அரசியல் கட்சிகளாக வளர்ந்து வருகின்றன.

இந்த அரசியல் விழிப்புணர்வு அரபுலகில் மட்டுமின்றி அதற்கு வெளியிலும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வருகிறது. துணைக்கண்டத்தில் பங்களாதேஷ், பாகிஸ்தான் என்பவற்றில் ஜமாஅத்தே இஸ்லாமி பலம் பொருந்திய அரசியல் சக்தியாக உருவெடுத்து வருகின்றது. பாகிஸ்தான் அரசாங்கத்தின் அமெரிக்கச் சார்புநிலை, இஸ்லாமியவாதிகளுக்கெதிரான ஒடுக்குமுறை என்பவற்றுக்கு மத்தியிலும் இஸ்லாமியவாதிகள் பலம்பெற்று வருகின்றனர். 2002 நவம்பர் பொதுத்தேர்தல் முடிவுகளை நோக்கும் போது இதனை ஓரளவு புரிந்துகொள்ளலாம். தென்கிழக்கு ஆசியாவில் இந்தோனேசியா, மலேசியா போன்றவற்றிலும் இஸ்லாமிய அமைப்பு சார்ந்த அரசியல் கட்சிகள் தீர்மானகரமான சக்திகளாக மாறிவருவது ஊன்றிக் கவனிக்கத்தக்கதொன்றாகும்.

இந்தோனேசியாவில் தன்மிய்யா இஸ்லாமிய்யா, அமானா மாசிம் ஜெதீத், அதாலா போன்ற அரசியல் கட்சிகள் தம்மிடையே ஓர் உடன்படிக்கையின்கீழ் இயங்குவதால் பாராளுமன்றத்தில்

பலமான எதிர்க்கட்சிகளாக உள்ளன. ஆளும் கட்சியின் அரசியல் தீர்மானங்களைப் பாதிக்கும் அழுத்தக் குழுக்களாக அவை இயங்கி வருகின்றன. மலேசியாவில் ஹிஸ்பே இஸ்லாமி, ஒரு பலம்வாய்ந்த எதிர்க்கட்சிகளாக செயல்பட்டு வருகிறது. இக்கட்சியின் கீழ் இரு மாகாணங்கள் உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இதுதவிர முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் மேற்கு நாடுகளிலும் இஸ்லாமிய எழுச்சி அலைகள் வேகமாக வீசத் தொடங்கியுள்ளன. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இஸ்லாமிய ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தஃவா நிறுவனங் களின் தலைமைப் பீடங்கள், பிரச்சாரத்திற்கான விரிவான சாதனங்கள், ஊடகங்கள் என்பவை மேற்கு நாடுகளில் பெருமளவு நிறுவப்பட்டு வருகின்றன. எதிர்வரும் இருபது ஆண்டுகளில் ஐரோப்பாவின் முஸ்லிம் மக்கள்தொகைக் கட்டமைப்பில் பெரும் மாற்றம் நிகழப் போகிறது என ஐரோப்பிய ஆய்வாளர்களே கூறுகின்றனர். அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சுவீடன், சுவிட்சர்லாந்து என்பவற்றில் இஸ்லாம் இரண்டாவது சக்தியாக உள்ளது. இவற்றை நோக்கும்போது இருபத்தோராம் நூற்றாண்டு இஸ்லாத்தின் நூற்றாண்டே என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய எழுச்சியலைகள் வேகமாக வீசியபோதும் இஸ்லாமிய ஆட்சி(கிலாஃபத்), என்பது மிகச் சாதாரணமாக ஏற்பட்டு விடாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். உஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் மீண்டும் இருபதாம் நூற்றாண்டில் களை கட்டிய இஸ்லாமிய விழிப்புணர்வு அதன் இறுதி எல்லைகளை எட்டுவதிலும் முழுமை பெறுவதிலும் இரு முக்கிய சவால்களை எதிர்நோக்குகின்றது. மீண்டும் ஒரு முறை இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாக வளர்ந்துவிடக்கூடாது என்பதில் குறியாய் இருந்து வரும் மேற்கத்திய சுரண்டல் சக்திகளின் அச்சுறுத்தல் அவற்றில் முதன்மையானது. கடந்த 30 வருடங்களாக வளர்ந்துவரும் இந்த இஸ்லாமிய எழுச்சிக்கெதிரான மேற்குலகச் சவால்கள் பல்வேறு முனைகளில் அரங்கேறி வருகின்றன. இஸ்லாமிய அறிவுஜீவிகளை, எழுச்சி வீரர்களை திட்டமிட்டுப் படுகொலை செய்தல், இஸ்லாமிய உலகின் நில ஒருமைப்பாட்டைத் துண்டாடுதல், இஸ்லாமிய இயக்கங்களை ஒடுக்குவதற்கு ஆட்சி இயந்திரங்களை அழுத்துதல், முஸ்லிம் உலகின் விடுதலைப் போராட்டங்களை நசுக்குதல், அதன் பொருளாதார வளங்களைச் சுரண்டுதல், இஸ்லாமியவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுக்க தேர்தலில் முடியுமானவரை

ஊழல், மோசடிகளைத் தூண்டுதல், அதற்கு நிதியுதவி வழங்குதல் என இந்த எழுச்சிக்கெதிரான சவால்கள் கட்டமைக்கப்படுகின்றன.

இஸ்லாமிய எழுச்சி எதிர்கொள்ளும் இரண்டாவது சவால் முஸ்லிம் உலகிலிருந்தே எழுகின்றது. இது மிகவும் அபாயகரமானது. பாரியது. குறிப்பாக முஸ்லிம் நாடுகளின் தலைமைப்பீடங்களில் அமர்ந்திருக்கும் ஆட்சியாளர்கள் குறைந்தபட்சமேனும் ஜனநாயகப் பெறுமானங்களுக்கு மதிப்பளிக்காது சர்வாதிகார முகங்களைக் காட்டி இஸ்லாமியவாதிகளை முடக்கி வருகின்றனர். தமது நாடுகளில் இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாக நிலை பெறுவதைத் தடுத்து நிறுத்த முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இந்த ஒடுக்குமுறை முயற்சிகளுக்கு அமெரிக்காவும் பிற மேற்கு சக்தி களும் எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

தேர்தல் காலங்களில் இஸ்லாமியவாதிகளுக்கு ஆதரவுள்ள பிரதேசங்களில் உச்சக்கட்ட ஊழல், மோசடிகளைத் தூண்டுவதற்கு சி.ஐ.ஏ., எஃப்.பி.ஐ. (C.I.A., F.B.I.) என்பன நேரடியாகவே நிதியுதவி களை வழங்கி வருகின்றன. இஸ்லாமிய எழுச்சிப் போராளிகளைக் கைது செய்து சிறையிலடைத்து சித்திரவதை செய்கின்றனர். பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியவாதிகள் சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்டனர், படுகின்றனர்.

இவ்வகையில் முஸ்லிம் நாடுகளில் தற்போதுள்ள அரசியல் தலைமைகளைப் பிரதானமாக இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம்: முதல் சாரார், மத்திய கிழக்கு நாடுகளில் மன்னர்களாக வீற்றிருப்பவர்கள். இவர்கள் மேற்குலகையும் இஸ்லாமியவாதி களையும் எப்படி எதிர்கொள்கின்றனர் என்பது குறித்து சில அவதானங்களைப் பகிர்வது பொருத்தமாக அமையும்.

இஸ்லாம் ஆன்மீக ரீதியில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதை மட்டும் இவர்கள் ஏற்கின்றனர். அதற்கு ஆதரவளிக் கின்றனர். பெருந்தொகையில் நிதியுதவிகளை வழங்குகின்றனர். ஆனால் இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாக வளர்ந்து ஆட்சிபீடத்திற்கு வருவதை இவர்கள் வெளிப்படையாகவே நிராகரிக்கின்றனர். இஸ்லாமியவாதிகள் ஆட்சிபீடமேறும்போது தமது நாட்டில் ஜனநாயக ரீதியான தேளர்தல்கள் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் ஓர் அரசியல் சூழல் உருவாகும். இதனால் ஆட்சி அதிகாரத்தைப் பரம்பரைச் சொத்தாக பயன்படுத்திவரும் இத்தகைய மன்னராட்சிக்கு முடிவு கட்டப்படும். விளைவு, அவர்கள் தமது அதிகாரப்பீடங்களிலிருந்து தூக்கி எறியப்படுவர்.

ஆதலால் இஸ்லாம் அரசியல் சக்தியாக வளர்வதை இவர்கள் தடுக்கின்றனர். தமது கைகளிலுள்ள அதிகாரத்தைத் துறப்பதற்கு ஒருபோதுமே தயாரில்லாத இவர்கள் இஸ்லாமிய இயக்கங்களின் செயற்பாடுகளை வன்மையாக ஒடுக்கி வருகின்றனர். சிறந்த இஸ்லாமியச் சிந்தனையாளர்களை நாடு கடத்தியும், சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியும் வருகின்றனர். மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய இயக்கங்களை மன்னர்கள் இவ்வாறுதான் எதிர்கொள் கின்றனர். ஸவூதி அரேபியா, கட்டார், குவைத், ஜோர்டான், சிரியா என்பவற்றில் இந்தப் போக்கை மிகத் தெளிவாகவே அவதானிக்கலாம்.

மேற்குலகை குறிப்பாக வாஷிங்டனைப் பொறுத்தவரை அது இத்தகைய மன்னர்களே தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டு மென எதிர்பார்க்கின்றது. தமது பொருளாதார, இராணுவ நலன் களை அடைய மிகவும் பொருத்தமான வழி இதுவே என்பது மேற்கு நாடுகளின் நிலைப்பாடு. மேற்குலகின் அரசியல் முடிவுகளுக்கு எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்காத, இத்தகைய தலையாட்டி பொம்மைகளையே அதிகாரத்தில் தக்கவைத்துக்கொள்ள வாஷிங்டன் அனைத்து வகை ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. வளர்ந்து வரும் இஸ்லாமிய அரசியல் சக்தியை நசுக்குதல், தென்மேற்கு ஆசியாவின் பெட்ரோலிய வளத்தை குறைந்த விலையில் சுரண்டுதல், மேற்கத்திய உற்பத்திகளின் சந்தைகளாக இந்நாடுகளைப் பயன் படுத்துதல் இவைதான் மத்திய கிழக்கைப் பொறுத்தவரை அமெரிக் காவின் வெளியுறவுக் கொள்கையில் முதன்மையான விஷயங்கள்.[19]

இன்று உலக ஆயுத சந்தையில் ஆயுதக் கொள்முதலில் முதலிடம் வகிக்கும் நாடு ஸவூதி அரேபியா. பல பில்லியன் டாலர்களை இதற்காக அந்நாடு செலவு செய்து வருகின்றது. அமெரிக்க உற்பத்திப் பொருட்களின் முதற்தர சந்தையாக இருப்பதும் மத்திய கிழக்கு நாடுகளே. ஈராக் மீதான வாஷிங்டனின் இராணுவ நடவடிக்கைகளுக்கு தமது விமான, துறைமுகத் தளங்களை வழங்கி முழுமையான ஒத்துழைப்பை இவ்வரசுகள் வழங்கின. ஒருவகையில் ஜனநாயக விரோதப் போக்குகளையும் இன்னொரு புறம் மறைமுக சர்வாதிகார முறைகளையும் கையாண்டு வரும் இத்தகைய ஆட்சியாளர்கள் எப் போதும் மேற்குலகின் கைப்பாவைகளாகவே இருந்து வருகின்றனர்.

ஆட்சியாளர்களில் இன்னொரு சாராரை தேசியவாத சித்தாந்தி கள் என்று அடையாளப்படுத்தலாம். இஸ்லாத்தை ஆன்மீக இயக்கமாகவோ, அரசியல் சக்தியாகவோ ஒப்புக்கொள்ள மறுக்

19. Edward Said, Thought about America, Islam Online, Nov.2002

கும் இவர்கள் இஸ்லாத்தின் அரசியல், பொருளாதார, சமூக அடையாளங்களை முற்றாக நிராகரித்து தமது அரசியல் நிகழ்ச்சி நிரலில் இனத்துவ அடையாளங்களை முன்னிலைப்படுத்துகின்றனர். இதனால் இஸ்லாமிய அடையாளங்களை வலியுறுத்தும் இயக்கங் களை ஓர் அரசியல் சக்தி என்ற வகையில் அடக்கியும், ஒடுக்கியும் வருகின்றனர். இந்த விடயத்தில் மேற்குலகு இவர்களுக்குப் போதியளவு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. ஜனநாயக ரீதியான தேர்தல்கள் மூலம் இஸ்லாமியவாதிகள் அதிகாரப்பீடத்திற்கு வரும்போது இத்தகைய தேசியவாதக் கொடுங்கோலர்கள் ஆட்சியி லிருந்து தூக்கி எறியப்படுவது இயல்பானதே.

இதனால் தமது நாடுகளில் இஸ்லாமிய இயக்கங்கள், அரசியல் கட்சிகள் வளர்வதை இவர்கள் முளையிலேயே கிள்ளியெறிய முயன்று வருகின்றனர். மன்னர்களைப் போன்றே இஸ்லாமிய வாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோரை கைது செய்து சிறைச் சாலைகளில் சித்திரவதை செய்தல், ஆயுட்கால சிறைத் தண்டனை வழங்கல், அல்-காயிதா இயக்கத்துடன் தொடர்பானவர்கள் எனக் குற்றம் சாட்டி அமெரிக்காவிடம் ஒப்படைத்தல், சிறைச்சாலைகளில் கூட்டுப்படுகொலைகளை மேற்கொள்ளல் போன்ற ஜனநாயக விரோத செயல்களில் இவர்கள் வெளிப்படையாகவே ஈடுபட்டு வருகின்றனர். மிகவும் வியப்பான விடயம் இவர்களை ஒருபோதும் மேற்கு சக்திகள் சர்வாதிகாரிகள் என்றோ மனித உரிமைகளை மீறிச் செயற்படுபவர்கள் என்றோ கருதுவதில்லை. இஸ்லாமிய வாதிகளை ஒடுக்கும் இவர்களே மேற்குலகின் பார்வையில் ஜனநாயகவாதிகள். காரணம் முஸ்லிம் நாடுகளின் மன்னர்களைப் போன்றே இத்தகைய ஆட்சியாளர்களின் ஊடாக தமது பிராந்திய, பொருளாதார நலன் களை அடைந்து கொள்ள வாஷிங்டனும் பிற மேற்கு சக்திகளும் முயல்கின்றன. பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், லிபியா, எகிப்து, சிரியா, அல்ஜீரியா, டியுனீஸியா, அஸர்பைஜான் போன்ற நாடுகளில் இத்தகைய தேசியவாத சர்வாதிகாரிகள் நீண்டகாலமாகவே ஆட்சியில் இருந்து வருகின்றனர்.

லிபியாவில் 1969இல் நடைபெற்ற புரட்சியைத் தொடர்ந்து கடந்த 34 வருடங்களாக கர்னல் கடாபி ஆட்சித் தலைவராக இருந்து வருகின்றார். சிரியாவின் முன்னாள் ஆட்சியாளர் ஹாபிஸ் அல் அஸத் கால் நூற்றாண்டுக்கு மேலாக அந்நாட்டில் ஜனாதிபதியாக இருந்து வந்துள்ளார். இத்தனைக்கும் அவர் ஒரு மதச்சார்பற்ற நாத்திகர். ஜோர்டானின் முன்னாள் மன்னர் ஹுஸைன் இருபது வருடங்களுக்கு மேலாக ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்தார்.

சதாம் ஆட்சிப்பீடத்திலமர்ந்து 23 வருடங்கள் கழிந்த நிலையிலேயே சென்ற ஆண்டில் பதவி கவிழ்க்கப்பட்டார். இதுபோன்று மத்திய ஆசியக் குடியரசுகளின் ஆட்சியாளர்கள் பல பத்தாண்டுகளைக் கடந்து ஆட்சிப்பீடத்தில் ஒய்யாரமாக வீற்றிருக்கின்றனர்.[20]

1960களில் எகிப்திலும், சிரியாவிலும் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தினர் ஜமால் அப்துல் நாஸர், ஹாபிஸ் அல் அஸத் போன்றோரின் கொடூர ஆட்சியில் மிருகத்தனமான தாக்குதல் களுக்குப் பலியாகினர். ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் சிறைச் சாலைகளின் ஒடுங்கிய, இருண்ட அறைகளில் எதிர்கொண்ட சித்திர வதைகள் மனித இன வரலாற்றில் மன்னிக்க முடியாதளவு மிகவும் கொடூரம் நிறைந்தவை.[21] 1990களில் லிபியாவின் பூசுலைம் சிறைச் சாலையில் அதிகாலைப் பொழுதொன்றில் இஸ்லாமிய வாதிகள் மீது கட்டவிழ்க்கப்பட்ட கூட்டுப்படுகொலைகள் கடாபியின் கொடூரம் நிறைந்த ஆட்சி வரலாற்றில் மட்டுமின்றி முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றிலேயே இரத்தக் கறை படிந்த பல இருட்டு அத்தியாயங்களை எழுதிவிட்டுச் சென்றுள்ளன. சதாமின் இருள் சிறைகளில் இஸ்லாமியவாதிகள் பட்ட துயரங்கள், அவலங்கள் வார்த்தைகளின் வர்ணிப்புகளுக்கு அப்பாற்பட்டவை.

இதுபோன்ற கொடுமைகளும் சித்திரவதைகளும் மத்திய ஆசியக் குடியரசுகளின் ஆட்சியாளர்களால் இன்றளவிலும் மேற்கொள்ளப் பட்டு வருவது மிகுந்த துயரத்திற்குரியது. உஸ்பெகிஸ்தான் இதற்கு ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு எனலாம். இஸ்லாம் கரிமோவ் ஆட்சியின் கீழ் அந்நாட்டில் இஸ்லாமிய இயக்கங்களும் ஆன்மீகத் தலைவர்களும் பெரும் கொடுமைகளை எதிர்கொள் கின்றனர். நூர் சுல்தானின் சர்வாதிகார ஆட்சியில் கஸகிஸ்தானில் இந்தக் கொடு மைகள் நடந்து வருகின்றன. தாஜிகிஸ்தானில், அஸர்பைஜானில் இத்தகைய அரச இயந்திரங்களின் அடக்கு முறைகள் தொடர்கின்றன. சமகால நிகழ்வுகளுக்கு லிபியாவும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு எனலாம். அங்கெல்லாம் இஸ்லாமிய இயக்கங்கள் மட்டுமின்றி இஸ்லாமிய கிலாஃபத் பற்றிப் பேசுகின்றவர்களே சிறைச் சாலை களின் ஒடுங்கிய சித்திரவதைக் கூடங்களுக்குப் பலியாக வேண்டிய துயரம் நீள்கிறது.

முஸ்லிம் உலகில் முஸ்லிம் ஆட்சியாளர்களால் இஸ்லாமிய வாதிகள் மீதும் இஸ்லாத்தை உறுதியாகப் பின்பற்றும் மக்கள்

20. Repression of Muslims Continuing in Uzbakistan 2003, Muslimmedia.com
21. Yehia Mohammed, Egiptiyan Government working with US to secularise and Americanise Islam, Muslimmedia.com

மீதும் கட்டவிழ்க்கப்படும் கொடுமைகளுக்கு ஒரு சில எடுத்துக் காட்டுகளையே இங்கு குறிப்பிட்டோம். இதைத் தனித்தனி நூலாக எழுதி வெளியிடலாம். எமது நோக்கம் அதுவன்று.

இனி முஸ்லிம் உலகில் இயங்கிவரும் இஸ்லாமியத் தலைமைத் துவத்தை விளங்க முயல்வோம். இஸ்லாமிய உலகில் கடந்த நூற்றாண்டின் முதற்கூறுகளிலிருந்து தொடங்கிய இஸ்லாமிய எழுச்சியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மிகப்பெரும் தியாகங்களை, அர்ப்பணிப்பை செய்தவர்களையே இஸ்லாமிய வாதிகள் என்கிறோம். இவர்கள் இஸ்லாமிய சமூக மாற்றத்தை எப்படி நோக்குகின்றனர்? முஸ்லிம் ஆட்சியாளர்கள் இவர்களை அடக்கி ஒடுக்க முயல்வதற்கான காரணம் என்ன? உண்மையில் நவீன இஸ்லாமிய எழுச்சி பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது என்று குறிப்பிட்டோம். இவ்வகையில் 200 வருட கால நீண்ட நெடும் வரலாற்றுப் பயணத்தில் கிலாஃபத் என்ற தொலை நோக்கு இலக்குடன் இயங்கிவரும் இத்தகைய இஸ்லாமிய வாதிகளை இருவகையாக நோக்கலாம்.

முதல் வகையினர் முற்றிலும் சாத்வீக வழியில் நூறு சதவீதம் ஜனநாயக முறையில் இஸ்லாமிய சமூக மாற்றம் ஒன்றுக்காக உழைப்பவர்கள். இஸ்லாமிய நாகரிகத்தை மீளவும் கட்டியெழுப்புவது அதை ஒரு வாழ்க்கைத் திட்டமாக நடைமுறைப்படுத்துவது, நவீன கால அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு இஸ்லாத்தை ஒரு தீர்வுத் திட்டமாக முன்வைத்தல் என்பவையே இத்தகைய இஸ்லாமியவாதிகளின் இறுதி இலக்குகள். இஸ்லாம் என்பது ஒரு சமூக வாழ்க்கைத் திட்டம். அதற்கென்று தனித்துவமான பொருளாதார, சமூக ஒழுங்குகள் உள்ளன. இவ்வாறான சமூகப் பொருளாதார அறிவுத்துறை மாற்றங்கள் மூலமே சமூக மாற்றம் என்பது சாத்தியமாகும். இதற்கான முதல் வழிமுறை இஸ்லாத்தை ஒரு முழுமையான வாழ்க்கை முறையாக மக்களிடம் கொண்டு செல்வதே. ஜனநாயக பூர்வமான பிரச்சார முறைகளை இதற்காகக் கையாள வேண்டும். அதிகாரம் இல்லாத சூழலில் இஸ்லாம் சமூக வாழ்க்கைத் திட்டமாக முடியாது. அவ்வகையில் மக்களின் சிந்தனையிலும் அறிவிலும் மாற்றங்களை ஏற்படுத்தி அரசியல் ரீதியான செயற்பாடுகளில் இறங்குவதன் ஊடாக இஸ்லாத்தை சமூக வாழ்க்கைத் திட்டமாக கொண்டுவர வேண்டும். இதுவே முதல் சாராரின் அடிப்படைக் கொள்கையும் போராட்டமும் எனலாம்.

எகிப்தில் இமாம் ஹஸனுல் பன்னா(ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்ட இஹ்வானுல் முஸ்லிமூன், துணைக்கண்டத்தில்

மௌலானா மௌதூதி(ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தே இஸ்லாமி, துருக்கியில் பேராசிரியர் நஜ்முத்தீன் அர்பகானினால் ஆரம்பிக்கப்பட்ட ரபாஹ் இயக்கம் என்பவை இந்தக் கொள்கையையும் இலக்கையும் கொண்டவை.

இன்று உலகளாவிய ரீதியில் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் இத்தகைய இயக்கங்கள் வெளிப்படையாகவே இயங்கி வருகின்றன. தனி மனித உருவாக்கம், இஸ்லாமியக் குடும்பம், இஸ்லாமிய சமூக அமைப்பு, இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய கிலாஃபத் என்ற ஒரு படிமுறை மாற்றத்தில் இவர்கள் முழு நம்பிக்கை வைத்துச் செயற்பட்டு வருகின்றனர்.

சமூக மாற்றம் என்பது இவர்களின் கருத்தில் ஆயுதங்களால் ஏற்பட முடியாதது. வன்முறைகள், உள்ளார்ந்த ஆயுதப் போர்கள், அரசியல் படுகொலைகள் போன்ற வழிமுறைகளின் ஊடாக இஸ்லாமிய சமூக மாற்றமொன்றை அடைய முடியாது. இஸ்லாமிய சமூக மாற்றம் என்பது கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்ப சக்திகளின் வளர்ச்சி, நெறிப்படுத்தப்பட்ட அரசியல் போராட்டம் இவற்றினூடாகவே சாத்தியப்பட முடியும் என்பதே இவர்களின் நிலைப்பாடு. அரசியல் வழிமுறையின் ஊடாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதைக்கூட இந்தக் குறிக்கோளை எட்டுவதற்கே என இவர்கள் நம்புகின்றனர். இந்நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சி இவர்களின் உழைப்பு, தியாகங்கள் என்பவற்றினாலேயே சாத்தியமானதை நாம் மறுத்துரைக்க முடியாது. இந்த எழுச்சியை நசுக்கி அதை முளையிலேயே கிள்ளியெறிய முனைந்த மேற்கு சக்தி களுக்கு இவர்களை என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏனெனில் முற்றிலும் சாத்வீக வழிமுறைகளைக் கையாண்டு ஜனநாயக ரீதியில் போராடும் இவ்வகை இயக்கங்களை ஆயுத முனையில் தடுத்து நிறுத்த எவ்வித நியாயமும் மேற்குலக சக்திகளுக்கு இருக்க வில்லை. ஆனால் இவர்களையே மேற்குலகு தமது தீர்த்துக்கட்ட வேண்டிய எதிரிகளாகக் கருதுகின்றது. தமது கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களில் இவர்களை அடிப்படைவாதிகள், பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து வருகின்றது.

இரண்டாவது சாரார், வளர்ந்துவரும் இஸ்லாமிய எழுச்சியை நசுக்குவதில் முனைப்பாகவுள்ள மேற்குலகையும் தமது சொந்த நாடுகளிலேயே ஆட்சி பீடத்தில் இருந்துகொண்டு மேற்குலகின் தாளத்திற்குத் தலையாட்டும் பொம்மைகளையும் கண்டு வெறுப்படைந்தவர்கள். அவர்கள் சற்று தீவிரமாகவே சிந்திக்கத் தொடங்கினர். 50க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை

நாடுகள் இருந்தும் இஸ்லாம் எங்கும் முழுமையாக நடைமுறையில் இல்லை. நமது சொந்த மண்ணிலேயே இஸ்லாத்திற்கு அதிகாரப் பீடம் வழங்கப் படவில்லை. இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாக உருவெடுத்து ஆட்சிபீடத்தில் அமர்வதற்குத் தடையாக இருப்பது மேற்கத்திய சுரண்டல் சக்திகளும் இஸ்லாமிய உலகின் ஆட்சியாளர் களுமே. எனவே இஸ்லாமிய சமூக மாற்றம் என்பது முதலில் இத்தகைய எதிரிகளை ஆயுத முனையில் எதிர்கொள்வதிலிருந்தே தொடங்க வேண்டும் என்ற முடிவுக்கு இவ்விரண்டாம் சாரார் வந்தனர்.

இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாக வாழ வேண்டும் என எதிர்பார்க்கும் இவர்கள் அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளனர். தமது எண்ணங்களில் இவர்கள் தூய்மை யானவர்கள். ஆனால் இஸ்லாமிய சமூக மாற்றத்திற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த வழிமுறைகள் அமெரிக்காவும் பிற சுரண்டல்வாத சக்திகளும் இஸ்லாமிய உலகை நோக்கிப் படையெடுக்கப் பெரும் வாய்ப்பாக அமைந்தமை மிகவும் வருந்தத்தக்கது.

ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை இழந்த இவர்கள், ஆயுதங்களாலும், வன்முறைகளாலுமே சமூக மாற்றத்தை எட்ட முடியும் என்ற உறுதியான நிலைப்பாட்டிற்கு வந்தனர். இஸ்லாமிய நாடுகளின் பல்வேறு பகுதிகளிலும் ஆயுத இயக்கங்களாக உருவெடுத்தனர். 1980களுக்குப் பிறகு இவர்களின் போக்குகள் தீவிரமடைந்தன. அல்ஜீரியாவில் 'ஜப்ஹதுல் இன்காத்' அப்பாஸ் மதனியின் தலைமையில் உள்நாட்டுப் போர் ஒன்றையே உருவாக் கியது. ஆட்சியாளருக்கு எதிராக தூக்கப்பட்ட ஆயுதங்கள் சக முஸ்லிம்கள் மீதே பிரயோகிக்கப்பட்டதால் இலட்சக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன. எகிப்தில் முபாரக்கின் ஆட்சியை ஒழித்துக்கட்ட உருவான 'ஜமாஅத்துல் இஸ்லாமிய்யா' வன்முறை களில் ஈடுபட்டதால் மிகப் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டன. 90களின் முதற்கூறுகளில் உஸாமாவின் தலைமையில் அல்-காயிதா உருவாக்கப்பட்டது. செப்.11 தாக்குதலுக்கு அல்-காயிதா தான் காரணமானதா என்பது இன்றுவரை நிரூபிக்கப் படவில்லை. ஆனால் 90களின் நடுப்பகுதியில் நைரோபியிலும், தாருஸ்ஸலா மிலும் அமெரிக்கத் தூதரகங்கள் மீது மேற்கொள்ளப் பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு அது உரிமை கோரியிருந்தது.

உண்மையில் இத்தகைய ஆயுத இயக்கங்களின் உருவாக்கம் மேற்கத்திய சுரண்டல் சக்திகளுக்கு நல்ல வாய்ப்புகளைத் திறந்து விட்டன. ஜனநாயக ரீதியில் அமைதியாக இயங்கி ஆரோக்கியமான

மாற்றங்களுக்காக உழைத்து வரும் இஸ்லாமிய இயக்கங்கள்தான் உண்மையில் மேற்குலகின் இலக்கு. எனினும் வெளிப்படையாக அவர்களோடு மோதிக்கொள்ள நியாயங்கள் ஏதுமில்லை. ஆனால் இத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் காரணம் காட்டி இஸ்லாமிய உலகை நோக்கிப் படையெடுப்பதற்கும் இராணுவ ரீதியில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் இவ்விரண்டாம் சாரார் காரணமானது மிகவும் வருந்தத்தக்கது.

இன்று பயங்கரவாதத்திற்கு எதிராக வாஷிங்டன் தொடங்கி வைத்துள்ள யுத்தத்தின் நீண்டகால இலக்கு அல்-காயிதாவோ, ஜமாஅத்துல் இஸ்லாமிய்யாவோ அல்ல. ஜனநாயக ரீதியில் இயங்கி வருகின்ற இஸ்லாமிய தஃவா அமைப்புகளே என்பதை நாம் கவனமாகப் புரிந்துகொள்ளவேண்டும். இவர்களை ஒடுக்குவதற்கு காட்டப்படும் வெளிக்காரணமே செப்.11 தாக்குதல் எனலாம். இஸ்லாமிய எழுச்சியை சுமந்துவரும் இத்தகைய இயக்கங்களை ஒடுக்குவதற்கு வாஷிங்டன் தற்போது பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகின்றது. உலகளாவிய ரீதியில் இஸ்லாமியவாதி களைக் கைது செய்து சிறையிலடைத்தல், இஸ்லாமிய இயக்கங்களின் நிதி மூலங்களை முடக்குதல், இவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களின் பாடத் திட்டத்தை மாற்றியமைத்தல், இவர்களால் வழிநடத்தப்படும் விடுதலைப் போராட்ட இயக்கங்களை நசுக்குதல் (ஹமாஸ், மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி) பயங்கரவாதிகளாகவும் அடிப் படைவாதிகளாகவும் இவர்களை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்ட விளைதல், அதற்காக ஊடகங்களை நன்கு பயன்படுத்தல் என்பவை அந்தத் தந்திரங்களில் சில. இவ்வகையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய ஒரு சுருக்கக் குறிப்பை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# மேற்கத்திய ஊடகச் சொல்லாடல்களில் இஸ்லாமிய அடிப்படைவாதம்

வாஷிங்டனிலுள்ள அமெரிக்க காங்கிரஸின் மாபெரும் நூலகத்திலோ அல்லது ஐரோப்பாவில் காணப்படும் பெரும் நூலகங்களிலோ உள்ள இஸ்லாமிய உலகு பற்றிய தகவல் வங்கியில் காணப்படும் வெளியீடுகள் அடங்கிய பகுதிகளின் பொத்தான்களை அழுத்தும்போது அல்லது கணினிகளின் தட்டுக்களைப் பிரயோகிக்கும் இடத்து அவற்றில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய ஆக்கங்களும் தகவல்களும் ஏனைய எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கும்.

– பேராசிரியர் ஜோன் எஸ்பொஸிடோ, 'இஸ்லாமும் பயங்கரவாதமும்' என்ற கட்டுரையில்.

அண்மைக்காலங்களில் மேற்கத்திய கல்வி வட்டத்திலும் வெகு மக்கள் தொடர்பு ஊடகங்களிலும் அமெரிக்க ஐரோப்பிய செய்தி முகவர் வட்டத்திலும் 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்ற சொல்லாடல் பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக செப்டம்பர் 11க்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாமியப் பயங்கரவாதம், இஸ்லாமியத் தீவிரவாதம் என்ற சொல்லாடல்கள் மிக அதிகமாகவே புழக்கத்திற்கு வந்தன. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் லெபனான், போஸ்னியா மீதான ஆயுத ஆக்கிரமிப்பு இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற போர்வையில் தான் நடந்தேறியது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அல்ஜீரியாவில் நடைபெற்ற சுதந்திரத் தேர்தல்களின் மூலம் பெறப்பட்ட பெறுபேறு களை மூடிமறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் எகிப்தில் இஸ்லாமிய இயக்கங்கள் மீது நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளும் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பெயரில்தான்.

இப்போது குவாண்டமாவில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான போராளிகள் மீதும் இஸ்லாமிய அடிப்படை வாதம் என்ற சொல்லாடல்தான் பெரிதும் பிரயோகிக்கப்படுகின்றது. இது தவிர மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா என்பவற்றில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியவாதிகள் சிறைக்கம்பிகளுக்குப்

பின்னால் சோதனைகளை எதிர்கொள்ளவும் இஸ்லாமிய அடிப்படை வாதம் என்பதே குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

மேற்கு ஊடகங்களிலும் மேற்கத்திய புலமைத்துவ வட்டாரங் களிலும் இவ்வாறான சொல்லாடல்கள் எப்போது நடைமுறைக்கு வந்தது? இச்சொல்லாடல்களைக் கண்டுபிடித்தவர்கள் யார்? அது பயங்கரவாதமாகவும் தீவிரவாதமாகவும் ஏன் கட்டமைக்கப் படுகின்றது? அடிப்படைவாதம் குறித்து நமக்குள் எழும் அடிப்படையான வினாக்கள் இவை.

மேற்கத்திய ஊடக வட்டத்தில் 1970களுக்குப் பின்னரே இச்சொல்லாடல் முதன்முறையாகப் பயன்பாட்டிற்கு வந்தது. குறிப்பாக ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர்தான் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பதம் முஸ்லிம் உலகு பற்றி எழுதப்பட்ட மேற்கத்தியர்களின் கட்டுரைகளிலும் ஆய்வுக் குறிப்புகளிலும் பரவலாக இடம்பெறலானது.[22] இதனைப் பயன்படுத்துவோர் அதன் மூலம் எத்தகைய அரசியல் நோக்கை அடைவதற்கு முயல்கின்றனர் என்பதையும் கவனமாக ஆராய வேண்டும்.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கையில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாத்தின் எழுச்சியும், வளர்ச்சியும் மேற்குலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இடைக்காலத்தில் நடைபெற்ற சிலுவைப் போர் ஐரோப்பிய மனப்பான்மையில் முஸ்லிம்களுக்கெதிரான பகைமையையும், காழ்ப்பையுமே தூண்டியது. இஸ்லாம் மிகப் பெரும் சக்தியாகவும் செல்வாக்குமிக்க அரசியல் காரணியாகவும் 13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டின் முதல் அரைக் கூறுகள் வரை விளங்கியது. அப்போதும் இஸ்லாத்தின் அரசியல், பொருளாதார, அறிவியல் முன்னேற்றங்களைக் கண்டு மேற்குலகு குலைநடுக்கம் கொண்டது. குறிப்பாக இக்காலப் பகுதியில் முஸ்லிம் உலகு அடைந்திருந்த தரச்சிறப்பும் செழுமையுமிக்க நாகரிக வளர்ச்சியும் அறிவியல்துறை விருத்தியும் இஸ்லாமிய சமூகத்தின் மீது மேற்குலகு குரோதம் கொள்ளக் காரணங்களாய் அமைந்தன.

துரதிர்ஷ்டவசமாக 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்கூறுகளில் இஸ்லாம் அரசியல் சக்தி என்ற வகையில் ஒரு தற்காலிகப் பின்னடைவை எதிர்நோக்கியது. இந்நிலையை மேற்குலகு மிகக் கவனமாகக் கையாள முனைந்தது. இஸ்லாமிய உலகை நோக்கி ஐரோப்பிய கிறிஸ்தவ உலகம் படையெடுக்கத் தொடங்கியது.

---

22. Links International Journal of Socialist Review Nov.-Sep.-Dec.2003, P.10

ஐரோப்பிய அரசியல் ஆதிக்கமும் காலனி அடக்குமுறையும் முஸ்லிம் உலகின் மீது படிப்படியாகத் திணிக்கப்பட்டன. ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா, மொரோக்கோ, டியூனீஸியா என்பவை பிரான்ஸின் கட்டுப்பாட்டிலும், இந்தோனேசியா டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலும், துருக்கி ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலும், லிபியா இத்தாலியின் ஆதிக்கத்திலும், எகிப்து பிரிட்டனின் ஆதிக்கத்திலும் வைக்கப்பட்டன. இக்காலப்பகுதியிலேயே கீழைத்தேயவாதம் (Orientalism) தோற்றம் பெற்றது. ஏகாதிபத்திய சக்திகளின் துணைக் கருவியாக அது செயல்படத் தொடங்கியது.

20ஆம் நூற்றாண்டின் முதற்கூறுகளில் முஸ்லிம் உலகு காலனித்துவத்திலிருந்து முற்றாக விடுதலை பெற்றபோதும் கீழைத்தேயவாதத்தின் அறிவியல் அயோக்கியத்தனங்களிலிருந்து விடுதலை பெறவில்லை.[23]

கீழைத்தேயவாதம் தொடர்ந்து ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாகச் செயல்பட்டுவந்தது. இஸ்லாம் பற்றியும் இஸ்லாமியக் கோட்பாடுகள் பற்றியும் முஸ்லிம்களின் உள்ளங்களில் ஐயங்களை எழுப்பும் வெறும் புனைவுகளைக் கட்டமைத்து இஸ்லாத்தின் தெய்வீகத் தூய்மையில் களங்கம் ஏற்படுத்தும் ஆய்வு முயற்சிகளே கீழைத்தேயவாதம் எனப்படுகிறது. கீழைத்தேய ஆய்வாளர்கள் (யூத, கிறிஸ்தவர்கள்) பல்வேறு கருத்து முகாம்களைச் சேர்ந்தவர்கள். பலர் கிறிஸ்தவ பிரச்சார இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள். கணிசமானவர்கள் யூத - சியோனிஸ வலைப்பின்னல்களுடன் இயங்கி வருபவர்கள்.[24]

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் இயங்கிவரும் மத்திய கிழக்குக்கான ஆய்வு மையங்களில் (Middle East Study Centre) இத்தகைய சியோனிஸ முகாம்களை ஆதரிக்கும் கீழைத்தேயவாதிகள் பிரதான இடம் வகித்து வருகின்றனர். அமெரிக்காவின் பிரபல வணிக நிறுவனங்களுக்கும் கிறிஸ்தவப் பிரச்சார அமைப்புகளுக்கும் இத்தகைய சியோனிஸக் குழுக்களுக்குமிடையே நெருங்கிய உறவுகள் இருந்து வருகின்றன. கடந்த பத்து வருடங்களில் அமெரிக்கப் புலமைத்துவ வட்டாரங்களில் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் இதனை நன்கு வெளிக்காட்டுகின்றன.

---

23. றவூப் ஸெய்ன், அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் கட்டுரைத் தொடர், பயணம் இதழ் 1, பக்.30

24. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க: றவூப் ஸெய்ன், கீழைத்தேய ஆய்வுகளும் இஸ்லாத்திற்கெதிரான சதிகளும் அல்-ஜாமியா, இதழ் 02, 1998

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தலைவர் நடஸப்ரன் (Nadawsafran) என்பவரும் அதே பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் சர்வதேச உறவுகளுக்கான மையம் (Centre for International Relations) பணிப்பாளரான சாமுவெல். பி.ஹன்டிங்டனும் இணைந்து இஸ்லாமிய உலகம் குறித்து ஆய்வொன்றை மேற்கொண்டனர். அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் வேண்டுகோளின் பேரிலேயே இவ்வாய்வு நடைபெற்றது. பேராசிரியர் ஸப்ரன் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்ய அமெரிக்க மத்திய உளவு நிறுவனம் 45000 அமெரிக்க டாலர்களை ஒதுக்கியது. இம்மாநாட்டின் கலந்துரையாடல்கள் பல்கலைக்கழகத்தின் வருடாந்திர அறிக்கை யாகவும் வெளியானது.

20ஆம் நுற்றாண்டின் முதற்கூறுகள் தொடக்கம் முஸ்லிம் உலகில் ஏற்பட்டுவரும் இஸ்லாமிய மறுமலர்ச்சியையும் புத்தெழுச்சியையும் மேற்கு நாடுகள் கூர்ந்து கவனித்துவந்தன. வளர்ந்துவரும் இஸ்லாமிய சக்தியானது மேற்கத்திய நவகாலனிய ஆதிக்கத்திற்குப் பெரும் சவால் என்று அவை கருதுகின்றன.

எனவே, இந்த இஸ்லாமிய அச்சுறுத்தலை முறியடித்து தென் மேற்கு ஆசியாவையும் பிற முஸ்லிம் நாடுகளையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முனைகின்றன. இதற்கு மேற்கத்திய உளவு வேலைகள் நன்கு பயன்படுகின்றன. இஸ்லாமிய சக்தியை முறியடிக்கவும் மேற்கு ஆதிபத்தியத்தை நிலைநாட்டவும் சம காலத்தில் கையாளப்படும் மிகப்பலம் வாய்ந்த கருவியே மேற்கத்திய ஊடகங்களின் பிரச்சார ஆயுதமாகும். முஸ்லிம் உலகின் பல்வேறு பாகங்களிலும் பொங்கிப் பாயும் இஸ்லாமிய எழுச்சி பற்றியும் அதன் புவியியல் சார்ந்த அரசியல் முக்கியத்துவம் குறித்தும் ஆய்வு நிபுணர்கள், சமூகவியலாளர்கள் என்போரின் துணையுடன் மேற் கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் முஸ்லிம் உலகு பற்றிய சரியான கணிப்பீட்டை மேற்கொள்வதும் அவற்றை உருமாற்றி அச்சுறுத்தலாகக் கட்டமைப்பதுமே மேற்கத்திய ஊடகங்களின் அடிப்படைப் பணியாக மாறிவிட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் மேற்கின் எதிரிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் நிலைநிறுத்தியதில் இந்த ஊடகங்கள் பெரும் பங்கு வகித்தன. இஸ்லாமிய விழிப் புணர்வை ஒரு பயங்கரவாதமாகச் சித்திரிப்பதிலும் சர்வதேச அளவில் அதைப் பிழையாகவும் உருக்குலைந்த தோற்றத்தில் பிரச்சாரம் செய்வதிலும் மேற்கின் ஊடகங்கள் மிக லாவகமாக இயங்கி வருகின்றன.

இந்த வகையில் இஸ்லாத்தின் நியாயமான வளர்ச்சியை பிழையாகச் சித்திரிக்க மேற்கு ஊடகங்கள் திட்டமிட்டுப் பரவலாக்கிய ஒரு சொல்லாடலே இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது. இச்சொல்லாடல் இஸ்லாமிய எழுச்சியை சித்திரிப்பதற் கென்றே புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு சொல்லாடல் அல்ல என்பதும் நமது கவனத்திற்குரியது. காரணம் இச்சொல், மேற்கத்திய கிறிஸ்தவ உலகில்தான் முதன்முதலில் அறிமுகமாகியிருந்தது.

1920களில் அமெரிக்காவில் தோன்றிய பழைமைவாய்ந்த ஆனால் புரட்சிவாத புரட்டஸ்தாந்து இயக்கத்தைக் குறிக்க பயன்படுத்திய பதமே அடிப்படைவாதம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் அமெரிக்காவின் புரட்டஸ்தாந்துப் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவத் திருச்சபைவாதிகள் நவீனத்துவவாதிகள்(Modernists) என்றும் பழைமைவாதிகள் (Orthodox) என்றும் இரு கூறுகளாகப் பிளவுண்டனர். நவீனத்துவவாதிகள் பைபிளை நவீன காலத்திற்கேற்ப விளக்குவதற்கு முயற்சி செய்த அதேவேளை பழைமைவாதிகளோ விவிலியத்தின் கருத்துகளை உள்ளது உள்ளவாறே எவ்வித நவீன விளக்கமுமின்றி விசுவாசிக்க வேண்டுமென்று கூறினர். இவர்களது கருத்துகள் நவீனத்துவவாதிகளின் கருத்துகளுக்கு எதிரானவையாக முன்வைக்கப்பட்டன. 1920களில் இவர்களே அடிப்படைவாதிகள் என அழைக்கப்பட்டனர். இங்கிருந்துதான் இச்சொல்லாடல் முதன்முறையாக ஊடகங்களுக்கு வந்தது.

சுருக்கப்பட்ட ஆக்ஸ்போர்ட் அகராதி (Shorter Oxford Dictionary) அடிப்படைவாதம் என்ற சொல்லுக்கு இவ்வாறு வரைவிலக்கணம் தருகிறது:

> கிறிஸ்தவ வாசகத்தின் அடிப்படையான, பழைமையான பாரம் பரியக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு பின்பற்றுதல் (Strict adherance to traditional orthodox tenets held to be fundamendal to chiristian faith).[25]

அடிப்படைவாதம் என்பது மிதவாதம், நவீனத்துவம் ஆகிய வற்றுக்கு எதிரானது என இவ்வகராதி கூறுகின்றது. 1919இல் உலக கிறிஸ்தவ அடிப்படைவாதச் சங்கம் (World Christian Fundamendal Association) மிகவும் பலம்பெற்று விளங்கியது. அப்போதெல்லாம் அடிப்படைவாதி என்ற பதம் கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை களுக்காகப் போராடுபவரைக் குறித்தது. 1920களில் சார்லஸ் டார்வினின் பரிணாமக் கொள்கை பள்ளிக் கூடங்களில் போதிக்கப்படுவதை இவ்வடிப்படைவாதிகள் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

---

25. சுக்ரி எம்.ஏ.எம்., இஸ்லாமிய அடிப்படைவாதம், - பதப்பிரயோகம் பற்றிய ஒரு விளக்கம், எமது பார்வை, இதழ் 01

எனினும் 1920களுக்குப் பின்னர் கிறிஸ்தவ அடிப்படைவாதத்தின் செல்வாக்கு மேற்குலகில் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. அதேவேளை வளர்ந்துவரும் இஸ்லாமிய எழுச்சியைக் குறிப்பதற்கு இச்சொல்லாடல் முஸ்லிம் உலகிற்கு எதிராகப் பயன்பாட்டுக்கு வந்தது.

## அமெரிக்க நூற்றாண்டின் முடிவும் வரலாறு விட்டுவைக்காத வெற்றிடமும்

நாகரிகங்கள் மற்றும் சமூகங்களின் வெற்றி தோல்வி, எழுச்சி வீழ்ச்சி பற்றிய நியதிகளை ஒரு முஸ்லிம் எப்படிப் பார்க்கின்றான் என்பது முக்கியமானது. நாகரிக வீழ்ச்சியின் தவிர்க்கவியலாமை குறித்த குர்ஆனியப் பின்னணி அறிவு இங்குதான் நமக்குத் தேவைப்படுகின்றது. தெய்வீகத் தூது மனித சமூகங்களை எட்டியது முதல் மனித வர்க்கத்தின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இறை நியதிகள்தான் முதன்மையான பாத்திரத்தை வகித்து வந்துள்ளன.

மார்க்ஸியக் கண்ணோட்டமும், முதலாளித்துவ வலதுசாரிக் கருத்துநிலையும் இந்த வரலாற்று யதார்த்தத்தை ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் வரலாற்றில் எழுந்து நின்ற மாபெரும் நாகரிகங்களின் உடைவும் சிதைவும் எவ்வாறு நிகழ்ந்தது என்ற கேள்விக்கு இக்கருத்து முகாம்களிடம் தெளிந்த பதிலும் கிடைப்ப தில்லை. வரலாற்று இயங்கியலில் மிகப்பெரும் தாக்குதிறன் கொண்ட காரணி உண்மையில் தெய்வீக நியதிகள்தான் என்பதை வரலாற்றிலிருந்து நாம் தெளிவாகவே புரிந்து கொள்கின்றோம்.

அல்குர்ஆன் இந்த நியதிகள் குறித்து ஓரளவு விலாவாரியாகவே பேசுகின்றது. இறந்த கால சிதைவுகளுக்கிடையே நிகழ்கால வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான அடையாளங்களைத் தேடுமாறு நம்மைப் பணிக்கின்றது.

பஜ்ர், ஹூத், கமர் போன்ற அத்தியாயங்கள் அல்லாஹ்வால் அழிக்கப்பட்ட சமூகங்களின் வரலாறு பற்றியும் அவற்றை அழித்ததற்கான காரணங்கள் பற்றியும் விளக்குகின்றன. அதன்படி இறை நிராகரிப்பையும் சடவாதத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமூகங்களை அல்லாஹ் அழித்துள்ளான். ''எங்களை விடப் பலமானவர்கள் யார்'' என்று கர்ச்சித்த ஆத் சமூகத்தைக் கூட அல்லாஹ் இல்லாதொழித்தான். இவ்வகையில் மாபெரும் நாகரிகங்களையே ஒரு சில கணப் பொழுதுகளில் தவிடுபொடி யாக்கும் ஆற்றல் அல்லாஹ்வுக்கு உண்டு எனவும் இந்த நாகரிகங் களின் அழிவிலும் வீழ்ச்சியிலும் நமக்கு ஏகப்பட்ட பண்பாட்டுப்

படிப்பினைகள் இருப்பதாகவும், அவற்றிலிருந்து உணர்வுபெறு மாறும் குர்ஆன் வேண்டுகின்றது.

லூத் சமூகத்தின் அழிவு ஒழுக்க எல்லைகளைக் கட்டுடைக்கும் சமூகங்கள் இறுதியில் அழிவைத் தான் சந்திக்க நேரிடும் என்பதை நமக்குச் சொல்கின்றது. பிர்அவ்ன் என்ற ஒரு கொடுங்கோலனையும் அவனது பரிவாரங்களையும் நாம் வரலாற்றில் சந்தித்தோம். அவர்கள் மிகப்பெரும் கோபுரங்களை, வானளாவ உயர்ந்து நிற்கும் மாளிகை களைக் கட்டி வாழ்ந்தார்கள். தெய்வீகத் தூதைப் புறக்கணித்தனர். பெரும் அரசியல் அநீதிகளை இழைத்தனர். சுரண்டல், பொருளாதார அநீதி, அடக்குமுறை, அத்துமீறல் இவற்றில்தான் பிர்அவ்னிய சமூகக் கட்டுமானம் எழுந்து நின்றது.

ஆனால் அது உடைந்து, சரிந்து, சுக்குநூறாகித் தகர்ந்தது. இந்த மாபெரும் அழிவுக்கு வழி செய்த வரலாற்று விதி என்ன? அநீதியின் மீது எழுந்து நிற்கும் எந்த நாகரிகமும் திடீரென்று பேரழிவைச் சந்திக்கின்றது என்ற சமூக இயங்கியல் விதியைத்தான் பிர்அவ்னிய சமூக அழிவில் நாம் பார்க்கிறோம்.

இப்படி நோக்குகையில் அநியாயத்தின் மீது, அரசியல் அநீதியின் மீது எழும் நாகரிகம், பண்பாட்டுப் பின்னடைவுமிக்க நாகரிகம், பொருளாதாரச் சுரண்டல், அடக்குமுறை, இறை நிராகரிப்பு, என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நாகரிகங்கள் மாபெரும் சக்தியாக உருவெடுத்து பாரிய சாதனைகளை நிலைநிறுத்துவது போல் காட்சியளித்தாலும் திடீரென வீழ்ந்து சுக்குநூறாகிப் போகின்றன. இவ்வாறு துரிதமாகவும் வேகமாகவும் அது விழும் என்று யாரும் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு அந்த வீழ்ச்சி பெரும் அதிர்ச்சியைத் தரும்.

மேலே நாம் சொன்ன வரலாற்று விதிகள் அனைத்தையுமே சமகால அமெரிக்க நாகரிகத்தின் மீது நாம் பிரயோகிக்க முடியும். குர்ஆனியப் பின்னணியில் பார்க்குமிடத்து அமெரிக்க ஆதிக்க நூற்றாண்டு முடிவுக்கு வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. அந்நாகரிகம் மெல்ல மெல்ல சரிந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் விட மிகப் பலமான ஒரு சக்தி இந்த உலகத்தை, நாகரிகங்களை, சமூகங்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது. ஆக அநியாயக்கார சக்திகள் பெரும் விருட்சமாய் நின்றாலும் அதன் வேர்கள் ஒருநாள் அறுந்து விழும். இறுதியில் அது சரிந்து அடங்கிப் போகும். இதுவே அல்குர்ஆன் முன்வைக்கும் வரலாற்று நியதி; சமூக விதி; தெய்வீக முடிவு.

சமூகங்களின் எழுச்சி, வீழ்ச்சி என்பன எதேச்சையான நிகழ்வுகளன்று. மாறாக அவை மிக நுணுக்கமான இறைநியதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே, எந்தவொரு சமூகம் எழுச்சிக்கான விதிகளைக் கவனத்திற்கொண்டு செயற்படுகின்றதோ அந்த சமூகம் எழுச்சியின் உச்சத்தை எட்டிவிடும். அதே போன்று எந்தவொரு சமூகம் வீழ்ச்சிக்கான விதிகளைப் பெற்றிடுமோ அப்போது அந்த சமூகத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிடும். இத்தகைய விதிகளில் எவ்விதப் பாரபட்சமும் கிடையாது. குர்ஆனிய மொழி மரபில் இவை இறைநியதி – ஸுன்னத்துல்லாஹ் – என அழைக்கப்படுகின்றது. சமூகவியல் அறிஞர்கள் இதனை 'சமூகவியல் விதிகள்' அல்லது 'நாகரிக விதிகள்' அல்லது 'பிரபஞ்ச நியதிகள்' என அழைப்பர்.

கிரேக்க மற்றும் ரோம, பாரசீக நாகரிகங்கள் ஆடம்பரத்தில் மூழ்கியபோது அவை வீழ்ச்சியைச் சந்தித்தன. ஏன் இஸ்லாமிய ஸ்பெய்ன் இறை வழி காட்டலை விட்டும் தடம் புரண்டு மௌட்டீக வாழ்க்கையில் மூழ்கியபோது வீழ்ச்சி தவிர்க்க முடியாததாயிற்று. இதனைவிட மிக அண்மையில் இறை நிராகரிப்பை உத்தியோக பூர்வ இலட்சணமாகக் கொண்டு மனித இயல்புக்கு எதிராக வாழ முற்பட்டபோது சோவியத் ஒன்றியம் அடைந்த வீழ்ச்சியையும் நாம் கண்ணுற்றோம். இதோ மற்றொரு நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தென்படத் துவங்கியுள்ளன.

அமெரிக்கர்கள் அதிஉயர் தனிநபர் வருமானத்தைப் பெறுகின்றனர். இரண்டாம் உலகப்போர் முதல் அதுவே உலகப் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்திவருகிறது. 1945இல் மொத்த உலக உற்பத்தியில் 50 சதவீதப்பங்கினை அமெரிக்கா கொண்டிருந்தது. ஆனால் அது 90களில் 30% ஆகக் குறைந்துவிட்டது. 2020இல் உலக உற்பத்தியில் அமெரிக்கச் செல்வாக்கு வெறும் 10%மாகக் குறைந்துவிடும்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் ''இருபதாம் நூற்றாண்டு அமெரிக்காவாகவே இருந்தது. அதேபோல் 21ஆம் நூற்றாண்டும் அமெரிக்காவாகவே இருக்கும்'' எனப் பிரகடனப்படுத்தினார். இப்பிரகடனம் அரசியல் விளம்பரத்திற்குப் பொருந்துமேயொழிய யதார்த்தம் அதற்குப் புறம்பானது.

சர்வதேச அரசியல் நிபுணர்கள் எதிர்வரும் நூற்றாண்டு அமெரிக்க நூற்றாண்டாக இருக்காது என்பதை ஒப்புக் கொள்கின்றனர். 20ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கப் பொருளாதாரம் 21ஆம் நூற்றாண்டில் நிச்சயம் நீங்கிவிடும். ஏனெனில் அமெரிக்காவோடு போட்டியிடத்தக்கவகையில் சர்வ

தேச ரீதியில் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் பொருளாதார, இராணுவப் பலம் அதிகரித்து வருகின்றது.

20ஆம் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதியில் ஏற்பட்ட பெரும் பொருளாதாரப் போட்டியே சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கும் அது துண்டு துண்டாகப் பிளவுபட்டமைக்கும் முக்கிய காரணமாக அமைந்தது. இத்தகையதொரு பெரும் பொருளாதாரப் போட்டி அமெரிக்கப் பொருளாதாரத்தின் அடிப்படைகளையே தகர்த்து விட்டது. இந்நிலை அமெரிக்க வரவு செலவுத் திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தி செலவுகளைக் குறைக்கும் நிலைக்கு அமெரிக்க நிர்வாகத்தைத் தள்ளிவிட்டது.

அமெரிக்காவின் பொருளாதாரப் பலம் குன்றிவருவது குறித்தும் இராணுவச் செல்வாக்கு பலவீனமடைந்து வருவது குறித்தும் சர்வதேச ரீதியில் பல பொருளாதார, அரசியல், வரலாற்று ஆய்வாளர்கள் எழுதி வருகின்றனர். இவர்களுள் முக்கிய மானவர்கள் இருவர்: முதலாமவர், பிரான்ஸிய முஸ்லிம் சிந்தனையாளர் ரோஜர் காரூதி. இவர் 'வீழ்ச்சிப் பாதையில் ஐக்கிய அமெரிக்கா' என்ற நூலை எழுதினார். இந்நூலில் அவர் சிலர் எதிர்பார்ப்பதை விட விரைவாக அமெரிக்கா வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது எனக் குறிப்பிடுகிறார். மேலும் பொருளாதாரப் பலவீனம் அமெரிக்காவை எப்படிப் பாதித்து வருகின்றதென்பதை தெளிவுபடுத்துவதோடு அமெரிக்காவில் அனைத்து மனித விழுமியங்களும் வெறும் வியாபாரப் பண்டமாக மாறியுள்ளன எனவும் அமெரிக்கச் சமூகம் ஆயுதம், போதைப்பொருள் என்ற இரு அடிப்படைகளின் மீதே எழுந்துள்ளது எனவும் குறிப்பிடுகிறார்.

அடுத்த சிந்தனையாளர் பீர்பயர்னிஹ் '21ஆம் நூற்றாண்டு நிச்சயம் அமெரிக்காவாக இருக்காது' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினார். இந்நூலில் அவர் அமெரிக்காவின் வீழ்ச்சி பற்றி சுருக்கமாக இப்படிக் குறிப்பிடுகிறார்:

> ''உண்மையில் உலகின் மீதான அமெரிக்கப் பொருளாதார ஆதிக்கம் ஒரு சுவையான கற்பனைதான். பலவீன உள்ளங் கொண்ட அறிவாளிகளே இதனை உண்மைப்படுத்துவர். ஏனெனில் மனித வரலாறு கேளிக்கைக்கு உட்படாதது. அதேபோல் அது தற்செயல் நிகழ்வுகளுக்குக் கட்டுப்படாதது.''

அமெரிக்காவின் வீழ்ச்சி குறித்து ஆராய்ந்த மற்றொரு சிந்தனை யாளர் பிர்ஜின்ஸ்கி. இவர் அமெரிக்க அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர். அவர் குறிப்பிட்டார்:

''உண்மையில் அமெரிக்காவின் பொருளாதார ஆதிக்கம்

சிதைவடைந்து கொண்டு செல்கின்றது. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் உலகின் மொத்த உற்பத்தியில் 30 சதவீதத்தைத் தனியாக உற்பத்தி செய்யக்கூடிய நிலைக்கு எந்தவொரு நாடும் செல்லாது. ஆனால் இந்நிலையை இருபதாம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் அமெரிக்கா பேணி வந்தது. அமெரிக்காவின் இந்நிலையை மற்றும் பல நாடுகள் எய்தும். எனினும் எந்தவொரு நாடும் தனியான பொருளாதார ஆதிக்கத்தை உலகில் செலுத்த மாட்டாது'' எனக் குறிப்பிட்டார்.

இந்த வகையில் அமெரிக்காவின் பொருளாதாரப் பின்னடைவின் முக்கிய ஏழு குறிகாட்டிகளை அடையாளப்படுத்த முடியும்:

**1. மொத்த உலக உற்பத்தியில் அமெரிக்காவின் பங்கில் வீழ்ச்சி**

உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்து அமெரிக்காவே முன்னணியில் நின்றபோதும் தற்போதைய நிலையில் மொத்த உலக உற்பத்தியில் அமெரிக்காவின் பங்கு 20% மட்டுமே. ஜப்பான், சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் பொருளாதாரப் பலம் மேலோங்கியமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

**2. அரசு வரவு, செலவுத் திட்டத்தில் சமநிலையின்மை**

அமெரிக்காவின் வரவு, செலவுத் திட்டத்தில் 1968 ஆம் ஆண்டு கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது. இதுவொரு பாரிய பொருளாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 1992ஆம் ஆண்டு 300 பில்லியன் டாலராக உயர்ந்திருந்த அது 1996இல் 107 பில்லியனாகக் குறைந்தது. தற்போதைய நிலையிலோ சுமார் 25 பில்லியன் டாலர்களாக இது வீழ்ச்சியடைந்துள்ளது.

**3. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வீழ்ச்சி**

அமெரிக்காவின் வரவு, செலவுத் திட்டத்தில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டதன் விளைவாக பொருளாதாரச் சமநிலையில் தடுமாற்றம் ஏற்படத் துவங்கியுள்ளது. அமெரிக்க நிதி அமைச்சின் அறிக்கை ஒன்று 1999 பிப்ரவரி 13இல் வெளியானது. இவ்வறிக்கை 1998ஆம் ஆண்டு 168587 பில்லியன் டாலர் பெறுமானத்தால் அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததெனக் குறிப்பிடுகின்றது.

இத்தகைய பெரும் பொருளாதார மந்தம் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் அமெரிக்க ஏற்றுமதிப் பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். இதுகுறித்து அமெரிக்க நிதியமைச்சின் அறிக்கை ஒன்று குறிப்பிடும்போது 1998ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஏற்றுமதி வருமானம் 6278 பில்லியன் டாலராய் குறைந்ததெனக் குறிப்பிடுகின்றது. இது அமெரிக்கா தனது ஏற்றுமதி வருமானத்தில் அடைந்த முதலாவது மிகப் பெரும் வீழ்ச்சியாகும்.

**4. தொழிலின்மையும் வறுமையும்**

அமெரிக்காவில் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் மிகக் குறைவாக உள்ளதன் விளைவாக அங்கு தொழிலின்மையின் பாதிப்பும் குறைவே. எனினும் 1990ஆம் ஆண்டில் 6.3 சதவீதத்தினர் வேலையற்றோராகக் காணப்பட்டனர். 96இல் இந்நிலை 4.8% ஆகவும் 1998இல் 4.6% ஆகவும் காணப்பட்டது. 1999ஆம் ஆண்டு இறுதியில் இது 5.5% முதல் 6% வரை அதிகரித்தது.

மற்றொரு புறம் அமெரிக்க சமூகத்தில் பெரும் பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலவுகின்றது. இதன் காரணமாக பயங்கர வறுமை நிலையும் தாண்டவமாடுகின்றது. முதலாளி வர்க்கம் தொடர்ந்து செல்வத்துக்குமேல் செல்வமாய்ச் சேர்த்து வருகின்றனர். மறு பக்கத்தில் வறியவர்களின் வறுமை தொடர்ந்து அதிகரித்த வண்ண முள்ளது. அமெரிக்கத் தேசிய சொத்தின் பெரும்பகுதி, மிகச் சிறிய குழுவினரிடமே தேங்கிக் கிடக்கிறது.

இந்தவகையில் அமெரிக்க மக்கள்தொகையில் 1சதவீதத்தினர் மொத்த செல்வத்தில் 50 சதவீதத்தை சொந்தமாக வைத்துள்ளனர். அதேவேளை மக்கள்தொகையில் 80 சதவீதத்தினர் 8% செல்வத் தையே கொண்டுள்ளனர். இதனால் 14% அமெரிக்கர்கள் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர். இது அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வப் புள்ளிவிபரம் என்பது கவனிக்கத் தக்கது. மேலும் இப்புள்ளி விபரம் அமெரிக்க மக்கள்தொகையில் 13.8% ஆனோர் மிக அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றது.

**5. பெரும் கடன் சுமை**

அண்மைய ஆண்டுகளில் அமெரிக்காவின் கடன்சுமை அதிகரித்து வருவதால் அதன் நிதிநிலைமை பெருமளவு பாதிப்படைந்துள்ளது. சாதாரணமாக நாடுகளிடையே நிலவும் வெளிநாட்டுக் கடன்தொகை வீதத்திலும் பார்க்க அமெரிக்க கடன் சுமை கணிசமானளவு பாரியதாக உள்ளது. உள்நாட்டு வளங்களுக்கும் வெளிநாட்டு ஏற்றுமதிகளுக்கு மிடையிலான பெருத்த இடைவெளியே கடன்சுமை எனக் கருதப்படு கின்றது. இத்தகைய கடன்சுமை அமெரிக்காவைப் பெரியளவு பாதித்து வருகின்றது.

**6. பிற நாடுகளில் தலையீடுகள் மீதான செலவு**

ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் மீதான அமெரிக்காவின் தலையீடுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வருகின்றன. 1990 முதல் உலகில் இடம்பெற்ற 90 சதவீதப் போர் களில் அமெரிக்காவின் ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

உலக யுத்த செலவில் அமெரிக்கா கணிசமானளவு பங்கை சுமந்து வருகின்றது. இந்தப் போர்களில் 42 பில்லியன் டாலர் பெறுமதியான அமெரிக்க ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இவை அமெரிக்க நேசநாடுகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டவை என்பது கவனிக்கத்தக்கது.

**7. ஆடம்பர நுகர்வு**

அமெரிக்க வாழ்வு மிகவும் பகட்டானதும் போலியானதும் டாம்பீக மானதும் ஆகும். நுகர்வுப் பொருட்களில் ஆடம்பரப் பொருட்கள் மீதான மோகமே மேலோங்கியிருக்கின்றது. குறிப்பாக அழகுசாதனப் பொருட்களின் நுகர்வு கணிசமானளவு உயர்ந்துள்ளது. இதற்காக அமெரிக்கா 8 பில்லியன் டாலர்களைச் செலவு செய்கின்றது.

அமெரிக்கர்களின் வீடுகளில் வளர்க்கப்படும் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகள் மீது தலைக்கு 750 அமெரிக்க டாலர்கள் செலவு செய்யப்படுகின்றன. இது ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றின் தனிநபர் வருமானத்தின் இரண்டு மடங்காகும். ஆண்டுதோறும் அமெரிக்கர்கள் செல்லப்பிராணிகளுக்காக மட்டும் 17 பில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவு செய்கின்றனர். இதுதவிர விளையாட்டுப் பொருட்கள், கைத்துப்பாக்கிகள் என்பவற்றின் மீதான செலவினங்களும் அதிகரித்து வருகின்றன.

ஆப்பிரிக்காவில் சில நாடுகளில் மக்கள் பட்டினியால் உயிரிழக் கின்றனர். ஆனால் ஒவ்வொரு வருடமும் அமெரிக்கா எஞ்சுகின்ற பல மில்லியன் டன் கோதுமையை கடலில் கொட்டுகின்றது. அவற்றை இலவசமாக விநியோகித்தால் அடுத்த ஆண்டில் உலக சந்தையில் கோதுமை விலை குறைந்துவிடும் என்பதே அமெரிக்காவின் நியாயம்(?).

உண்மையில் மேற்சொன்ன குறிகாட்டிகள் அமெரிக்கப் பொருளா தாரம் மிக வேகமாக சரிந்து வருவதையே வெளிக்காட்டி நிற்கின்றன. இதுதவிர இராணுவப் பலத்தில் ஏற்பட்டுவரும் பின்னடைவும் அமெரிக்க ஆதிக்க உடைவின் ஒரு முக்கிய குறிகாட்டியாக விளங்கு கின்றது. உலகமெங்கும் தனது ஆதிக்கத்தைத் தக்க வைக்க நிறுத்தப் பட்டுள்ள அமெரிக்க இராணுவப் படையணிகள் தமது அரச இயந்திரத்தில் நம்பிக்கையிழந்து விரக்தியடைந்து வருகின்றனர். பலர் மனநோயாளிகளாகக் கூட மாறி வருகின்றனர். தமது உண்மை யான எதிரி யார்? ஏன் அப்பாவி மக்களுடன் போராடிக் கொண்டு அச்சமும் பயங்கரமும் நிறைந்ததொரு வாழ்வை அனுபவிக்கிறோம் என்ற மயக்கமான நிலையில் அவர்கள் உயிர்த்தியாகம் செய்யத் தயாராக இல்லை.

கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்க இராணுவத்தில் இணையும் தொண்டர் படையும் கணிசமாகக் குறைந்து வருகின்றது. இராணுவத் துறையில் இடம்பெற்று வரும் பாலியல் கொடுமைகளும் பலாத்காரமும் மற்றொரு சவாலாக உருவெடுத்து வருகின்றது. இப்படி அமெரிக்க இராணுவப் பலமும் சிதைவடையத் துவங்கியுள்ளது.

இந்தப் பின்னடைவின் காரணிகள் திரட்சியடைகையில் அமெரிக்க வல்லரசின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிடும். எந்தவொரு பேரரசுக்கும் ஒரு முடிவுகாலம் உள்ளது. அந்தத் தவணைக்காலம் அமெரிக்காவை நோக்கி மிக வேகமாகவே நெருங்கிக் கொண்டிருக்கின்றது. நாளை, ஒரு புறம் நலிவடைந்த சமூகங்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்றுடனும் இன்னொரு புறம் அடக்கியும் ஒடுக்கியும் வாழ்ந்த சமூகங்களுக்கெதிரான இனிய பழிவாங்கலையும் சுமந்து கொண்டு நம்மை நோக்கி நகர்ந்து வருகின்றது.

இந்த வரலாற்று யதார்த்தம் வரலாற்றின் எல்லாக் கால கட்டங்களிலும் நிகழ்ந்து வந்திருக்கிறது. வரலாறு வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை. அமெரிக்க வீழ்ச்சி உலகின் ஆதிக்கபீடத்தில் ஒரு வெற்றிடத்தை விட்டு வைக்கும். அது ஏதோவொரு சக்தியினால் நிரப்பப்படும் என்பதும் நிச்சயம். இந்த வெற்றிடத்தை இஸ்லாமிய சமூகம் நிரப்புமா? அல்லது வேறு சக்திகள் நிரப்புமா என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. வரலாற்றின் இயங்கு திசையை மாற்றும் ஆற்றல் நமக்குள்ளிருந்தே பிறக்க வேண்டும். அதை விடுத்து சமூக இயக்கத்தின் திசை மாற்றம் தானாகவே நிகழும் என்று நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

# முஸ்லிம்களின் வெற்றி தாமதிப்பதேன்?

உலகைத் தேடுவது வாழ்வின் இறுதி இலக்காகிவிடும்போது மரணம் பற்றிய அச்சமும் பீதியும் நம்மை ஆட்கொள்கிறன. இதனால் அற்ப இன்பங்கள் மீதான பற்றும் மோகமும் அதிகரித்து போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. முஸ்லிம் சமூகத்தை நோக்கி பிற எதிர் சக்திகள் படையெடுக்கவும் ஆக்கிரமிக்கவுமான பாதைகளை இது திறந்து விடுகின்றது. சத்தியத்தைக் கையில் வைத்திருக்கின்ற ஒரு சமூகம் அற்ப இன்பங்களுக்காக மரணத்தை வெறுக்கும்போது சமூகப் பின்னடைவு என்பது தவிர்க்க முடியாது போய்விடுகிறது.

'உலகிலேயே சிறந்த சமுதாயம்' என்று அல்லாஹ் அல்குர்ஆனில் சிலாகிக்கும் சமூகம் முஸ்லிம்கள்தான். அதில் எந்த ஐயமும் நமக் கில்லை. முஸ்லிம் சமூகம் வரலாற்றின் பல்வேறு கால கட்டங் களிலும் வெற்றியையும் தோல்வியையும் மாறிமாறிப் பெற்று வந்துள்ளது. நபி(ஸல்) அவர்களின் காலம் முதல் கடந்த நூற்றாண்டின் முதற்கூறுகள் வரை முஸ்லிம்கள் அடைந்த எழுச்சியும் வீழ்ச்சியும் இரவையும் பகலையும் போன்று, வசந்தம் இலையுதிர் காலம் போல மாறி மாறியே நிகழ்ந்து வந்துள்ளன. இதுவொரு இறை நியதி. இந்தப் பாரிய பிரபஞ்சத்தினை இயக்கும் இயங்கியல் விதிகளில் ஒன்று. மாற்றவே முடியாத நிஜம். அந்த வெற்றி தோல்விகளை நாம் சமூகங்களுக்கு மாறி மாறிக் கொடுக்கிறோம் என்று அல்குர்ஆன் இதனைக் குறிப்பிடுகிறது.

இன்று உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் பல்வேறு முனை களிலும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சில நாடுகளில் ஆயுதத் தாக்குதல்களால் உயிர்களையும் உடைமை களையும் இழந்து நிற்கின்றனர். தமது தாய்நாட்டு மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகள் நிலை கொண்டு தமது மக்களைக் கொடுமைப் படுத்துவதைக் காண்கிறார்கள். இந்தத் துயர நிகழ்வுகளால் முஸ்லிம் சகோதரர்களில் சிலர் நம்பிக்கை இழப்பதுண்டு. முஸ்லிம்கள்

வீழ்ந்துவிட்டார்கள் என்றும் இஸ்லாம் தோல்வியடைந்துவிட்டது என்றும் இவர்கள் எண்ணுகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் எழுச்சி மீதும் இஸ்லாத்திற்காக உழைக்கும் இயக்கங்கள் மீதும் அவர்களுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் இல்லாது போய் விரக்தியடைந்து நிற்கிறார்கள். இவர்களை ஆற்றுப் படுத்துவது இன்றுள்ள முக்கியத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

இவர்கள் இஸ்லாத்தின் சமூக எழுச்சி, வீழ்ச்சி குறித்த அடிப்படை விதிகள் பற்றிய குறைந்தபட்ச அறிவும் இல்லாதவர்கள். இதை அவர்களது குறையாகக் கருத வேண்டியதில்லை. மானசீக ரீதியில் அவர்களைப் பலப்படுத்துவதே இஸ்லாமிய அறிவுஜீவிகளின் பொறுப்பாகும்.

''முஃமின்களுக்கு வெற்றியை வழங்குவது நம்முடைய கடமை யாகும்.'' *(குர்ஆன் 30:47)*

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்குமான வெற்றியும் ஆட்சி அதிகாரமும் அல்லாஹ்வால் வாக்களிக்கப்பட்ட ஒன்று. அல்லாஹ் எவ்வகையிலும் வாக்குறுதி மீறாதவன் என்று நாம் நம்பிக்கை கொள்கிறோம். எனவே முஸ்லிம்கள் வரலாற்றில் மிகப் பெரும் தோல்வியையும் போராட்டத்தையும் சந்தித்த போதும் அவர்கள் முற்றாக அழிந்து இஸ்லாம் என்ற இறைத்தூது மறைந்து போக வில்லை. மங்கோலிய தாத்தாரியப் படையெடுப்பும், சிலுவைப் போர்களும் முஸ்லிம் சமூகத்தை இரத்த வெள்ளத்தில் அமிழ்த்தியது. பக்தாதில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் மங்கோலியர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டபோது ஈராக்கே குருதியில் குளிக்க நேர்ந்தது. அப்போது உயிர் வாழ்ந்த இப்னுல் அஸீர் என்ற வரலாற்றாசிரியர் தனது வரலாற்று நூலில் பக்தாதில் நடந்த கொடுமைகள் பற்றி

''எனது தாய் என்னைப் பெறாமல் இருந்திருக்கக்கூடாதா? எனது கண்களால் இக்கொடுமைகளைக் காணாமல் இருந்திருக்க வேண்டுமே''

என்று எழுதுகிறார்.

ஆனாலும் அந்த வீழ்ச்சியிலிருந்து முஸ்லிம் சமுதாயம் மீண்டும் ஒருமுறை உஸ்மானியப் பேரரசு என்ற மிகப் பெரும் சாம்ராஜ்யம் ஒன்றைக் கட்டியெழுப்பியது. உலக நிலப்பரப்பின் அரைவாசி அதன் ஆதிக்கத்தின் கீழிருந்தது. உலகில் முஸ்லிம் என்ற பெயரைத் தாங்கியவர்கள் பெரும் மரியாதைக்குரியவர்களாக நோக்கப்பட்டார் கள். பொருளாதாரச் செழிப்பும் நீதியும் சமத்துவமும் உலகை ஆண்டது. இது பல நூற்றாண்டுகள் நீடித்தது. இதிலிருந்து நாம் எதனைப் புரிந்து கொள்கிறோம்?

முஸ்லிம் சமுதாயம் பலவீனமடையலாம். நோய்வாய்ப்படலாம். ஆனால் அது முற்றாக அழிந்து போய்விடுவதில்லை. வீழ்ச்சியின் அதலபாதாளத்தில் அது வீசப்படும் போதெல்லாம் மீண்டும் எழுச்சியின் சிகரங்களை அது தொட்டிருக்கிறது. ஒரு அதிகார சக்தியாக ஆட்சிபீடத்தில் இஸ்லாம் பல நூற்றாண்டு காலம் அமர்ந்திருக்கிறது. இந்த வரலாற்று நியதி இறந்த காலத்திற்கு மட்டும் உரியதல்ல. அது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தழுவியது. இஸ்லாம் அல்லாஹ்வின் தூது என்பதால் அதற்கே இறுதி வெற்றி என்பதில் எந்த ஐயமும் இல்லை.

எனினும் உம்மத்தின் வெற்றி குறித்த இந்த இறை நியதியை பலர் தவறாக அர்த்தம் கொள்வதுண்டு. இஸ்லாம் அல்லாஹ்விடம் இருந்து வந்தது என்பதற்காக மட்டும் அந்த வெற்றி எப்படியேனும் கிட்டிவிடும் என்பது நம்மில் சிலரின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பு பிழையானதல்ல. எனினும் மனித முயற்சிகள், உழைப்புகள், தியாகங்கள், அர்ப்பணங்கள் எதுவுமே கலவாத முழுமையான தொரு அற்புத நிகழ்வாக அந்த வெற்றியை எதிர்பார்ப்பது பிழையான கண்ணோட்டமாகும். முஸ்லிம்கள் உலகில் வெற்றியுடன் பாதுகாப் பாகவும் அதிகாரம் கொண்டவர்களாகவும் வாழ வேண்டுமாயின் அதற்கென்று சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஜாஹதா, இஜ்திஹாத், ஜிஹாத் என்பவை அவற்றுள் முதன்மையானவை.

'முஜாஹதா' என்னும் ஆன்மீக உழைப்பு இஸ்லாமிய எழுச்சியின் மூல நிபந்தனைகளில் ஒன்று. இதுவே இஸ்லாமிய சமூக மாற்றத்தின் அடிப்படையான ஷரத்தும்கூட. பாவச் செயல்கள் அதிகரித்து அநீதி யும் அடக்குமுறையும் மேலோங்கி அல்லாஹ்வுடனான தொடர்புகள் அறுந்துபோகும் போது பெரும் ஆன்மீக வறுமை மேலெழுகிறது. அதுவே சமூக வீழ்ச்சியின் தொடக்கமாகவும் அமைந்து விடுகிறது. முஸ்லிம் சமூகத்தின் நோயெதிர்ப்பு சக்தியாக விளங்கும் இந்த ஆன்மீகப் பலத்தைப் புறக்கணித்துவிட்டு எந்த மாற்றத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஸலாஹுத்தீன் ஐய்யூபியின் மிகப் பெரும் போராட்ட வெற்றிகளுக்குப் பின்னால் இருந்ததெல்லாம் இந்த ஆன்மீக இரகசியமே.

இஸ்லாமிய சமூக எழுச்சியின் இரண்டாவது நிபந்தனை உலகியல் சார்ந்த அதன் உழைப்பாகும். அறிவியல், தொழில்நுட்பத் துறை முன்னேற்றங்கள் பூமியை வளப்படுத்தும் பணிக்கு அத்தியா வசியமானவை. முஸ்லிம் சமுதாயத்தின் பௌதீக ரீதியான வளர்ச்சி, அதனது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப சாதனங்கள்,

கைத்தொழில்துறை உற்பத்திகள் என்பவற்றிலேயே தங்கியிருக்கின்றன. உற்பத்திகள் எதுவுமின்றி வெறும் நுகர்வுச் சமூகமாக இருப்பவர்களால் உலகை ஆள முடியாது. மாறாக சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் உயிர் வாழுகின்ற சமூகமாகவே அது இருக்கும்.

மூன்றாவதாக, உலகைத் தேடுவது வாழ்வின் இறுதி இலக்காகி விடும்போது மரணம் பற்றிய அச்சமும் பீதியும் நம்மை ஆட்கொள்கின்றன. இதனால் அற்ப இன்பங்கள் மீதான பற்றும் மோகமும் அதிகரித்து போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. முஸ்லிம் சமூகத்தை நோக்கி பிற எதிர் சக்திகள் படையெடுக்கவும் ஆக்கிரமிக்கவுமான பாதைகளை இது திறந்து விடுகின்றது. சத்தியத்தைக் கையில் வைத்திருக்கின்ற ஒரு சமூகம் அற்ப இன்பங்களுக்காக மரணத்தை வெறுக்கும்போது சமூகப் பின்னடைவு என்பது தவிர்க்க முடியாது போய்விடுகிறது.

வரலாற்றை ஓரளவு பின்னோக்கிப் பாருங்கள். முஜாஹதா, இஜ்திஹாத், ஜிஹாத் இவை மூன்றும் அல்லது மூன்றில் ஏதேனும் ஒன்று புறக்கணிக்கப்பட்டபோது முஸ்லிம் சமூகத்தின் தோல்வி தவிர்க்க முடியாது நிகழ்ந்து வந்திருக்கிறது. வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களிலும் இஸ்லாமிய சமூகம் அடைந்த எழுச்சியையும் வீழ்ச்சியையும் நோக்குகின்றபோது நாம் புரிந்துகொள்ளும் ஒரு நிதர்சன உண்மை இதுதான். ஆனால் இன்று முஸ்லிம்கள் ஓரளவு விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிரியையும் நண்பனையும் அடையாளம் காணும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். தமது சமூகம் பற்றிய கரிசனையும் அக்கறையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிற்சில தற்காலிக இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றபோதும் உலகெல்லாம் இஸ்லாமிய எழுச்சியின் அலைகள் வேகமாக வீசத் தொடங்கி விட்டன.

இப்போது முஸ்லிம் சமூகம் அடைந்துள்ள பின்னடைவு தற்காலிகமானதே. அநியாயக்கார சக்திகளுக்கும் அதிகாரம் செலுத்துவதற்கு ஒரு தவணைக்காலம் கொடுக்கப்படுவது இறை நியதிகளில் ஒன்று. ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்களில் அசத்திய சக்திகளைக் கண்டு அஞ்சிவிடக்கூடாது. சமூகங்களின் எழுச்சி வீழ்ச்சி பற்றிய அல் குர்ஆனின் போதனைகளைப் படிக்கின்ற போது எதிரிகளின் மிகப் பெரும் ஆயுதங்கள், போர்க்கருவிகளைக் கண்டு பீதியுறத் தேவையில்லை என்பதையும் முஸ்லிம்களுக்கே இறுதி வெற்றி என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

அநியாயத்தின் மீது எழும் சமூகம், ஒழுக்கச் சீர்கேட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்கும் சமூகம், சடவாத இன்பங்களை

மட்டுமே நோக்கமாகக் கொண்ட சமூகம், இறைத்தூதை நிராகரித்து வாழும் சமூகம் இவற்றின் முடிவு மிகவும் பயங்கரமானவை. அவை தற்காலிகமாக பெரும் ஆதிக்க சக்தியாக எழுந்து நின்றபோதும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் முகங்குப்புற விழுந்து தவிடு பொடியாகிப் போகின்றன.

இப்பகைப்புலத்தில் நின்று பார்க்குமிடத்து இன்று மிகப் பெரும் அரக்கனாக உருவெடுத்து அகிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முனையும் அமெரிக்க நாகரிகமோ, ஐரோப்பிய சக்திகளோ வீழ்ச்சியடைந்து விடும் என்பது தவிர்க்க முடியாதது. 83 வருடங்களுக்குள் பிறப்பையும் மரணத்தையும் சந்தித்த சோவியத் யூனியனின் உடைவு இதற்கு மிக அண்மிய எடுத்துக்காட்டாகும். பிர்அவ்னிய, லூத், ஆத், ஸமூத் சமூகங்களின் வீழ்ச்சியைப் பார்க்கும் யாரும் பிரமித்துப் போவார்கள். இவ்வகையில் இப்போதுள்ள உலகாதிக்கச் சக்திகள் கிட்டிய எதிர்காலத்தில் சுக்குநூறாய்ப் போய்விடுவார்கள் என்பதில் எந்த ஐயமோ ஆச்சரியமோ கிடையாது.

வெற்றி முஸ்லிம்களுக்கே என்பது அல்லாஹ்வின் வாக்குறுதி. ஆனால் அந்த வெற்றியை துரிதப்படுத்துவதும் காலம் தாழ்த்துவதும் முஸ்லிம் சமுதாயத்தைப் பொறுத்தது. அது முஸ்லிம் சமூகத்தின் சுயபரிசீலனை, தியாகம், உழைப்பு என்பவற்றில்தான் தங்கியிருக்கிறது. வரலாறு வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை என்பதைப் போன்றே வெற்றியும் தோல்வியும் மாறி மாறி நிகழ்கின்றது என்பதும் மாற்ற முடியாத ஒரு சமூக நியதி. இவ்வகையில் இஸ்லாத்திற்கான வெற்றி அண்மித்துவிட்டது. மேற்குலகின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. ஆனால் இங்கு எழும் கேள்வி அந்த வெற்றியை துரிதப்படுத்தவும் சுமந்து கொள்ளவும் முஸ்லிம் சமுதாயம் தயாராகிவிட்டதா என்பதே.

## உசாத்துணை நூல்கள்

1. மஃமூத் ஷாகிர், 1980, ஆலமுல் இஸ்லாமி (இஸ்லாமிய உலகம்), டமஸ்கஸ் பதிப்பகம்.
2. கலாநிதி முஹம்மது ஸைத் ஸபாஃ, கலாநிதி ஹாமித் ஷாகிர் ஹில்மி, கலாநிதி அஸ்ஹத் ஸுபைர், கலாநிதி தாஹா உஸ்மான், 1981, அத்தாரிஹ் தௌலா இஸ்லாமிய்யா, சவூதி அரேபியா: கல்வி அமைச்சு வெளியீடு.
3. கலாநிதி அலி ஜுரைசா, நான்காம் பதிப்பு 1989, ஹாழிருல் ஆலமில் இஸ்லாமி (சமகால இஸ்லாமிய உலகு), ஜித்தா: தாருல் முஜ்தமஉ வெளியீட்டு மையம்.
4. கலாநிதி முஹம்மது நஸ்ர், 1983, கழாயா ஆலமில் இஸ்லாமி, எகிப்து: மின்ஷஅத் மஆரிப் வெளியீட்டு மையம்.
5. Barbie Zeizer and Stuart Allan (Edit), Journalism after September 11, Routlegde, London 2002

இணையதளக் கட்டுரைகள்:

1. Alain frachon and Danial Vernat: The strategist and the philosopher, The masterminds of Americas' foreign policy 2003. www.islamonline.com, Trt by Normal Madarasa.
2. Repression of Muslims Continuing in Uzbekistan 2003, www.muslimmedia.com.
3. Yahia Mohammed Egyption Government working with US to Secularise and Americanise Islam, www.muslimmedia.com
4. The failing states of the Caucasas, www.muslimmedia.com
5. C.G. Weeramantry, Legal and Moral Implication of the Military Intervention in Iraq, www.sundaytimes.lk
6. An America's Perspective (middle east and South Asian Studies 2001), www.islamonline.com
7. Ameen Issadeen, Out of WMP and into Quagmire 2003, www.dailymirror.lk
8. Ameen Issadeen, Turkey where Confronts Secularism, 2003 www.dailymirror.lk
9. Ameen Issadeen, US Playing Different Ball Game in South Asia, 2003, www.dailymirror.lk
10. Edward Said, Thoughts about America
11. Faizal Bodi, Of cource it is war on Islam, 2001, www.theguardian.com
12. Edward Herman, David Peterson, Who Terrorizes whom, www.globalresearch.com
13. Mark Glenn, The real war between two world views, Sunday observer September 2003, www.dailynews.lk

## எமது பிற வெளியீடுகள்

1. **கருத்து வேறுபாடுகள்: இஸ்லாமிய சட்டத்துறையில் அதன் தோற்றத்திற்கான காரணங்கள்**
   கலாநிதி முஹம்மத் அபுல் பத்ஹ் பயானூனி
2. **மதமும் அறிவியலும்**
   கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி
3. **ஹதீஸ் முறைமையும் தொகுப்புகளும்**
   டாக்டர் முஹம்மத் முஸ்தபா அஸமி
4. **நாளைய முஸ்லிம் பெண்**
   கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி
5. **இஸ்லாமிய பண்பாட்டு மத்திய நிலையங்கள்**
   கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி
6. **நிராகரிப்பிற்கும் தீவிரவாதத்திற்கும் மத்தியில் இஸ்லாமிய எழுச்சி**
   கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி
7. **பள்ளிவாசலில் பெண்கள்:**
   **பால்வேற்றுமை பற்றிய வரலாற்றுப் பார்வை**
   நெவின் ரேடா
8. **பிலால்[ரலி]**
   எச்.ஏ.எல். க்ரெய்க்
9. **ஜகாத்: கோட்பாடும் நடைமுறையும்**
   எச்.ஐ.கைருல் பஷர், எம்.ஏ.எம்.மன்ஸூர், ஏ.ஸீ.அகார் முஹம்மத், ஸீ.ஐயூப் அலி



சர்வதேச விவகாரங்களைப்
புரிந்துகொள்ளும் வழிகள் குழம்பும்போது
அல்லது அங்கு ஏதாவது விடயம்
எனக்குத் தெளிவற்றதாகி
சர்வதேச விவகாரங்களின் அடிப்படைகளே
ஆட்டம் காண்பதாகத் தோன்றும்போது
நான் வரலாற்றிடமும் புவியியல்
உண்மைகளிடமும் தஞ்சம் புகுவேன்.
பெரும்பாலும் என் குழப்பங்களுக்கு
அங்கே முக்கியத்துவம் வாய்ந்த
விடைகள் கிடைக்கும்.

-கலாநிதி தாரிகுல் பிஷ்ரி
(எகிப்திய அரசியல் சிந்தனையாளர்)

ISBN 819029545-4
9788190295451 01

RS 93.50

மெல்லினம்